Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JANUARY 31, 2024

புதன்கிழமை ஜனவரி 31, 2024 | ஒளி: 10 கதிர்: 183 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE





கொழும்பை முடக்கும் முதல் முயற்சியே

# கண்ணீர் புகை வீசி கலைப்பு

- ‘எங்களுக்கு வேண்டும் அரசாங்கம்” கோஷத்தால் அதிர்ந்தது
- முஜிபுர் ரஹ்மான் உட்பட இருவருக்கு காயம்
- இரகசியத்தால் மாணவர்களின் வரைவு குறைந்தது
- ஆர்ப்பாட்ட பேரணியால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, "2024 ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் ஆண்டு" என்னும் தொனிப்பொருளில், கொழும்பை முடக்கும் ஆர்ப்பாட்ட பேரணியை செவ்வாய்க்கிழமை (30) மாலை முன்னெடுத்திருந்தது.

எங்கு? எத்தனை மணிக்கு ஆரம்பிக்கப்படும், எவ்விடத்தில் நிறைவடையும் என்ற தகவல்கள் எவையும் வெளிவராத நிலையில், கொழும்பு விஹாரமகா தேவி பூங்காவில், ஐக்கிய மக்கள் சக்தியினர் பிற்பகல் 1 மணியளவில் இரகசியமாக ஒன்றுகூடினர்.

இதற்கு முன்னர், கொழும்பில் உள்ள பல பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும் ஆர்ப்பாட்ட பேரணிக்கு தடையுத்தரவு கோரி, பல நீதிமன்றங்களில் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். பல நீதிமன்றங்கள் அந்த கோரிக்கை மனுக்களை நிராகரித்துவிட்டன. சில நீதிமன்றங்களின் ஊடாக தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இவற்றுக்கு மத்தியில் விஹாரமகா தேவி பூங்காவுக்கு முன்பாக பிற்பகல் 2 மணியளவில் ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியின் பெருந்திரளான ஆதரவாளர்கள் ஒன்றுகூடியதன் பின்னர் ஆர்ப்பாட்ட பேரணி, தேசிய நூலகத்துக்கு அருகில் பயணித்துக்கொண்டிருந்தது.

அங்கு ஏற்கெனவே தயார் நிலையில் இருந்து கலகமடக்கும் படையினர், பொலிஸார், ஆர்ப்பாட்டத்தில் வந்தவர்கள் மீது கண்ணீர் புகைக்குண்டு தாக்குதல் நடத்தியதுடன் நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதனால், அவ்விடமே அல்லோலகல்லோலப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த அனைவரும் அவ்விடத்தில் இருந்து சிதறியடித்து பதறியோடினர். இதனால், பலரின் பாதணிகள் மற்றும் அறுந்த செருப்புகள் அவ்விடத்தில் சிதறி கிடந்தன. நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர் புகைக்குண்டு வீச்சி நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவும், ஆர்ப்பாட்ட பேரணியில் இணைந்திருந்தார்.

தொடர்ச்சி P12

# இரத்தான பரீட்சை குறித்து அறிவிப்பு

நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞான வினாத்தாளுக்குப் பதிலாக, பெப்ரவரி 1ஆம் திகதி நடைபெறவுள்ள புதிய பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி அட்டையை wdoenets.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த பரீட்சைகளுக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் மாத்திரம் இணையத்தளத்துக்கு பிரவேசித்து அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளுமாறு பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# கணவனின் வெற்றிடத்தை நிரப்ப விருப்பம்

## சனத் நிஷாந்தவின் மனைவி அறிவிப்பு



புத்தளம் மாவட்ட மக்களோ அல்லது கட்சியோ கேட்டால் மாத்திரமே தனது கணவரின் வெற்றிடத்தைப் பரிசீலிக்க தான தயாராக இருப்பதாக மறைந்த முன்னாள் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மனைவி சட்டத்தரணி சாமரி பிரியங்கா பெரேரா தெரிவித்துள்ளார்.

அண்மையில் வாகன விபத்தில் உயிரிழந்த முன்னாள் இராஜாங்க அமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் அனுராதா ஜயக்கொடியின் இல்லத்திற்குச் சென்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P12

நிமல் லன்சாவின்

# புதிய கூட்டணி ரணிலின் சூழ்ச்சி



ஆ.ரமேஸ்.

பாராளுமன்ற உறுப்பினர் நிமால் லன்சா தலைமையில், புதிய அரசியல் கூட்டணி உருவாகியுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

தொடர்ச்சி P12



அடுத்துவரும் படைக்கலச் சேவிதருக்கு

# செங்கோல், வாள் கையளிப்பு


ஒய்வுபெறும் பாராளுமன்றப் படைக்கலச் சேவிதர் நரேந்திர பெர்னாந்து, அடுத்துவரும் படைக்கலச் சேவிதர் குஷான் சம்பத் ஜயரத்னவுக்கு செங்கோல் மற்றும் படைக்கலச் சேவிதரின் வாள் ஆகியவற்றை சம்பிரதாயபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு பாராளுமன்ற சபை மண்டபத்தின் வெள்ளிக் கதவுக்கு அருகில், செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்றது.

பாராளுமன்றத்தின் படைக்கலச் சேவிதர் நரேந்திர பெர்னாந்து 42 வருடங்கள் பாராளுமன்றத்தில் சேவையாற்றி செவ்வாய்க்கிழமையுடன் (30) ஒய்வுபெறவுள்ளதால் அடுத்துவரும் படைக்கலச் சேவிதருக்கு செங்கோல் மற்றும் படைக்கலச் சேவிதரின் வாள் இவ்வாறு சம்பிரதாயபூர்வமாக வழக்கிவைக்கப்பட்டது.

> **பாராளுமன்றத்தின் 7ஆவது படைக்கலச் சேவிதராக குஷான் சம்பத் ஜயரத்ன புதன்கிழமை (31) பணிகளைப் பொறுப்பேற்கவுள்ளார்**

பாராளுமன்றத்தின் 6ஆவது படைக்கலச் சேவிதர் நரேந்திர பெர்னாந்து, 2018 முதல் படைக்கலச் சேவிதராக சேவையாற்றினார். அதற்கமைய பாராளுமன்றத்தின் 7ஆவது படைக்கலச் சேவிதராக குஷான் சம்பத் ஜயரத்ன புதன்கிழமை (31) பணிகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

# இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறை



பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரரும் முன்னாள் பிரதமருமான இம்ரான் கான், பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் (பிடிஐ) கட்சித் தலைவராக உள்ளார். 71 வயதான இம்ரான் கான், 2018 முதல் ஏப்ரல் 2022, வரையிலான காலகட்டத்தில் பாகிஸ்தானின் பிரதமராக பதவி வகித்தார். இந்நிலையில், அவர் மீது, அரசு இரகசியங்களை கசியவிட்ட குற்றச்சாட்டு உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. அரசு இரகசியங்களை கசியவிட்ட குற்றச்சாட்டில் கடந்த மாதம் இம்ரானுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியிருந்தது. இந்த வழக்கில் இம்ரான் கான் மற்றும் அவரது தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் துணைத் தலைவர் குரேஷிக்கும் தலா 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து அந்நாட்டின் சிறப்பு நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (30) உத்தரவிட்டுள்ளது. ஏற்கெனவே பரிசுப்பொருள் வழக்கில் விதிக்கப்பட்ட 3 ஆண்டுகள் சிறைக்கு நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# நுளம்பு வலை நூல் இறுகி சிறுவன் பலி

ரஸீன் ரஸ்மின்




புத்தளம் - வில்லுவ வைத்து பகுதியில் நுளம்பு வலை நூல் இறுகி சிறுவன் ஒருவன் ஞாயிற்றுக்கிழமை (28) இரவு உயிரிழந்துள்ளான்.

புத்தளம் - அநுராதபுரம் வீதியில் உள்ள வில்லுவ வத்தை பகுதியைச் சேர்ந்த மல்லவ ஆராச்சிலாகே உபேக்ஸ் தீபமால் எனும் 12 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நோய்வாய்ப்பட்டிருந்த சிறுவன் வீட்டில் உள்ள கட்டிலில் விளையாடிக் கொண்டிருந்த போது, அங்கு தொங்கிக் கொண்டிருந்த நுளம்பு வலையொன்றின் நூல் பகுதி சிறுவனின் கழுத்தில் இறுகியாதாக தெரிவிக்கப்படுகிறது.

விளையாடிக் கொண்டிருந்த சிறுவனின்

தொடர்ச்சி P12



# மிதவைக்குடை வீரர் காயம்: கட்டடத்தில் இருவர் இறங்கினர்

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தின் பிரதான வைபவம், கொழும்பு காலி முகத்திடலில் பெப்ரவரி 4ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான ஒத்திகைகள் செவ்வாய்க்கிழமை (30) முன்னெடுக்கப்பட்டன. காலி முகத்திடல் வீதி, பொதுப்போக்குவரத்துக்கு முற்றாக தடைச்செய்யப்பட்டு, ஒத்திகைகள் இடம்பெற்றன.

இந்நிலையில், ஒத்திகையில் பங்கேற்றிருந்த மிதவைக்குடை (பராசூட்) வீரர்களில் ஒருவர், பராசூட்டில் இருந்து இறங்கும் போது காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். இன்னும் இரண்டு பராசூட் வீரர்கள், கட்டடத்தின் மேல் இறங்கியுள்ளனர்.

இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் கே.ஏ.என்.

தொடர்ச்சி P12

PAGE 1 தொடர்ச்சிகள்

# மிதவைக்குடை வீரர் காயம்: கட்டடத்தில் இருவர் இறங்கினர்

ரசிக குமார தெரிவிக்கையில், காயமடைந்த பராசூட் வீரர்களில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், ஏனைய இரு படையினரை மீட்கப்பட்டு இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றார். காயமடைந்த நால்வரில் இருவர் இலங்கை விமானப்படை வீரர்கள் என்றும் ஏனைய இருவரும் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்த அவர், காற்றின் வேகம் அதிகமாக இருந்தமையால் உரிய திசையில் பராசூட்டை செலுத்தமுடியாத நிலைமையில் இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்றார்.

# கணவனின் வெற்றிடத்தை நிரப்ப விருப்பம்

"எனது கணவர் புத்தளம் மாவட்டத்திற்கும் நாட்டு மக்களுக்கும் அளப்பரிய சேவை செய்துள்ளார். அவரிடம் உதவி கேட்ட எவரும் வெறுங்கையுடன் திருப்பி அனுப்பப்படவில்லை. அவருக்கு என்ன நடந்தது என்பதை என்னால் நம்ப முடியவில்லை எனது கணவர் இறப்பதற்கு முன்பே சில ஊடகங்கள் நான் அரசியலுக்கு வருவேன் என அறிவித்தன. இதுபோன்ற செய்திகளை வெளியிடும் போது யாரும் என்னிடம் கேட்கவில்லை.அரசியலுக்கு வருகிறேன் என்று இதுவரை எந்த ஊடகத்திலும் அறிக்கை விடவில்லை. கூறினார்.

மேலும், எனது கணவரின் அரசியல் விவகாரங்களில் பாதியை நான் நிர்வகித்தாலும், அவரின் தனிப்பட்ட செயலாளராக செயற்பட்டாலும், அரசியலுக்கு வருவேன் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இன்னும் அந்த நம்பிக்கை இல்லை.ஆனால் புத்தளம் மக்கள், நாட்டு மக்கள் மற்றும் அவர் விட்டுச் சென்ற பதவியை ஏற்று மக்கள் பணியைத் தொடருமாறு கட்சித் தலைமை என்னைக் கேட்டுக் கொண்டது, நான் அதைப் பற்றி சிந்திக்க வேண்டியிருக்கலாம்" என்றும் அவர் கூறினார்.

# புதிய கூட்டணி ரணிலின் சூழ்ச்சி

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சூழ்ச்சியால் இக்கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வேலுசாமி இராதாகிருஸ்ணன், இக்கூட்டணி ஆதரவைப் பெற்று ஜனாதிபதி பதவி அல்லது அரசாங்கத்தை அமைத்துக்கொள்ள ரணில் முயற்சிக்கின்றார் என்றார்.

நுவரெலியாவில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்திலுள்ள காரியாலயத்தில் திங்கட்கிழமை (29) மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நிமல் லன்சா தலைமையிலான

இந்த கூட்டணியில் அரசாங்கத்தில் இருப்பவர்களும் அரசாங்கத்தை விட்டு வெளியில் வந்தவர்களும் ஒன்று சேர்ந்து உருவாக்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனினும், இந்தக் கூட்டணி அரசாங்கத்தில் இருக்கின்ற உறுப்பினர்களின் கூட்டணி என்றும் சொல்லலாம் என்றார்.

இந்த கூட்டணி, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் சொல்லியிருந்தார்கள். இந்த கூட்டணியில் நாங்கள் போய்ச் சேர்வது அல்லது இணையுமாறு எங்களையும் அழைப்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல.

அதேநேரத்தில் இந்த கூட்டணியில் நாங்கள் போய் இணைவது தொடர்பில் எமது நிகழ்ச்சி நிரலிலும் இல்லை. எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசாவின் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து தொடர்ந்து செயல்படுவதே எமது நிலைப்பாடாகும் என்றார். எனவே, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கூட்டணியின் நன்மை தீமைகளை அவர்கள் சொல்ல வேண்டும் எனவும் இவர்கள் நல்லதைச் செய்வார்களா அல்லது இவர்களும் கடந்த காலத்தில் அரசாங்கம் செய்த செயல்களை மீண்டும் செய்வார்களா? என்ற சந்தேகம் எமக்கு இருக்கிறது என்றார்.

புதிய கூட்டணியிலிருந்து எமக்கு அழைப்பு இதுவரைக்கும் வரவில்லை,வந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன், இந்த கூட்டணியை உருவாக்கி அதன் ஆதரவைப் பெற்றுக்கொண்டு எதிர்காலத்தில் தான் ஜனாதிபதியாக வரவேண்டும் அல்லது பாராளுமன்றத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செயல்படுகின்றார் என்றும் குற்றஞ்சாட்டினார்.

இவரின் இந்த சூழ்ச்சியில் நாம் வீழ்ந்து விடக்கூடாது என்பதே எதிர்கால நன்மையாக இருக்குமென்று நான் நினைக்கிறேன் எனவும் கூறினார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளிநாடுகளுக்குச் சென்று கடன் பெற்று அரசாங்கத்தைக் காப்பாற்றுவது அவரது முறையாக இருக்கலாம் மாறாக நாட்டினுடைய உற்பத்தியை அதிகரிப்பது, நாட்டினுடைய வளர்ச்சியை முன் நோக்கிக் கொண்டு செல்வது போன்ற வேலைத்திட்டம் இந்த அரசாங்கத்தில் எதுவும் இல்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் குற்றம் சுமத்தினார்.

அத்துடன், நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்து மக்கள் அவதிப்பட்டு வாழும் நிலையில் வெளிநாடுகளில் கடனை பெற்று சொகுசாக வாழ்வதே ஜனாதிபதியின் திட்டமாக இருக்கிறது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

# கண்ணீர் புகை...

விவசாயிகள், மீனவர்கள், அரசு ஊழியர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சி ஆர்வலர்கள் என ஏராளமானோர் ஆர்ப்பாட்ட பேரணியின் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியால், கொழும்பு நகர சபையை அண்டிய பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டிருந்தன. அதுமட்டுமன்றி, ஆர்ப்பாட்ட பேரணி ஆரம்பிக்கும் இடங்கள் மற்றும் நிறைவடையும் இடம் தொடர்பில் எவ்விதமான தகவல்களும் முன்கூட்டியே வெளியாகாமையால், கொழும்பில் உள்ள பாடசாலைகளின் பலவற்றின் மாணவர்களின் வருகை ஓரளவுக்குக் குறைவாகவே இருந்தது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சஜித் பிரேமதாச உள்ளிட்ட அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் ஆர்வலர்கள் பதினைந்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்கும் ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணியைத் தடுக்கும் வகையில் தடை உத்தரவு பிறப்பிக்குமாறு குருந்துவத்தை பொலிஸாரின் கோரிக்கையைக் கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் நிராகரித்தார்.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, அந்த சக்தியின் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார, ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய கொழும்பு ஏற்பாட்டாளர் முஜிபுர் ரஹ்மான், ஐக்கிய மக்கள் சக்தியின் மத்திய கொழும்பு அமைப்பாளர் அப்சரா அமரசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மற்றும் பெண் செயற்பாட்டாளர்களுக்கே கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

வீதி போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில் செயற்பட வேண்டாமெனவும் நிதியமைச்சு, ஜனாதிபதி செயலகம், மத்திய வங்கி மற்றும் ஜனாதிபதி மாளிகை ஆகியவற்றுக்குள் உட்பிரவேசிப்பதைத் தவிர்க்குமாறும், பொது மற்றும் தனியார் சொத்துகளுக்கு சேதமேற்படுத்த வேண்டாமெனவும் நீதிமன்ற உத்தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தடையுத்தரவுகளை மீறி, பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி, கொழும்பு நகரசபை வளாகத்தில் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள் மாலை 6 மணிய வரையிலும் அவ்விடத்திலேயே ஆங்காங்கே குழுமியிருந்தமையையும் அவதானிக்க முடிந்தது.

"மாற்றத்தை ஏற்படுத்தும் வருடம் - 2024" எனும் தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு விகாரமகாதேவி பூங்கா அருகில் செவ்வாய்க்கிழமை (30) முன்னெடுத்த எதிர்ப்புப் பேரணியில் கலந்து கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொதுச் செயலாளருமான முஜிபுர் ரஹ்மான் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பேரணியைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நலம் விசாரிக்கச் சென்றமை குறிப்பிடத்தக்கது. அவருடன் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டாரவும் சென்றிருந்தார்.

இந்நிலையில், அரசாங்கத்துக்கு எதிராக இந்த எதிர்ப்புப் பேரணியில் கலந்துகொண்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர் ஒருவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவரையும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்டவர்கள் பார்வையிட்டனர்.

# கடத்தவிருந்த ஒரு தொகை ஏலக்காய் பறிமுதல்



ரொஷேரியன் லெம்பட்

இராமநாதபுரம் - பாம்பன், குந்துகால் கடற்கரையிலிருந்து நாட்டிற்குக் கடத்த முயன்ற ஏலக்காய், மண்டபம் மெரைன் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில் மன்னார் வளைகுடா கடல் வழியாகப் படகொன்றில் திங்கட்கிழமை(29) நள்ளிரவு நாட்டிற்கு ஏலக்காய் கடத்தப்பட இருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது படகில் இருந்த மூவர் தப்பிச்சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மூடையைச் சோதனை செய்தபோது அதில் 43 கிலோ கிராம் ஏலக்காய் இருந்துள்ளதோடு

கைப்பற்றப்பட்ட ஏலக்காய் மூடை இராமேஸ்வரம் சுங்கத்துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட ஏலக்காய் இந்திய மதிப்பில் 1 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் இருக்கும் எனவும் இந்த மெரைன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# உலகில் ஊழல் மிகவும் குறைந்த நாடு டென்மார்க்

உலகில் ஊழல் மிகுந்த நாடுகள் கொண்ட பட்டியலை அரசு சாரா அமைப்பான 'டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்' என்ற அமைப்பு வெளியிட்டு வருகிறது. உலகில் உள்ள 180 நாடுகளில் இந்த அமைப்பு ஆய்வு மேற்கொண்டு வரிசைப்படுத்துகிறது. நிர்வாக வெளிப்படைத்தன்மை, இலஞ்சம், ஊழல் மற்றும் முறைகேடுகள் போன்றவற்றைக் காரணிகளாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இந்த காரணிகளின் அடிப்படையில் 100-க்கு 100 மதிப்பெண்கள் பெறும் நாடு ஊழலற்ற நாடு என்ற வகையில் தரவரிசைப் பட்டியலில் முதலிடம் வழங்கப்படுகிறது. பூஜ்ஜியம் (0) மதிப்பெண் பெறும் நாடு ஊழல் மிகுந்த நாடாகக் குறிப்பிடப்படுகிறது.

அவ்வகையில் இந்த ஆண்டுக்கான தரவரிசை பட்டியலை டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் வெளியிட்டுள்ளது. மொத்தம் உள்ள 180 நாடுகளில் எந்த நாடும் 100-க்கு 100 மதிப்பெண் பெறவில்லை. அதாவது உலகம் முழுவதும் ஊழல் இருப்பதை இந்த பட்டியல் காட்டுகிறது. 90 மதிப்பெண் பெற்ற டென்மார்க் ஊழல் மிகவும் குறைந்த நாடாக முதலிடத்தைப் பிடித்துள்ளது. 87 மதிப்பெண்களுடன் பின்லாந்து 2-ம் இடத்தையும், 85 மதிப்பெண்களுடன் நியூசிலாந்து 3ஆம் இடத்தையும் பிடித்துள்ளன.

கடந்த ஆண்டு 85ஆவது இடத்திலிருந்த இந்தியா இந்த ஆண்டு 93-வது இடத்திற்குப் பின்தங்கியுள்ளது. கடந்த ஆண்டு 40 மதிப்பெண்கள் பெற்றிருந்த நிலையில், இந்த ஆண்டு 39 மதிப்பெண்கள் பெற்றுள்ளது.

இதேபோல் கஜகஸ்தான், லெசோத்தோ, மாலத்தீவு ஆகிய நாடுகளும் 39 மதிப்பெண்களுடன் இந்தியாவுடன் 93ஆவது இடத்தை பகிர்ந்துகொண்டுள்ளன.

பாகிஸ்தான் இந்தப் பட்டியலில் 133ஆவது இடத்தையும், இலங்கை 115ஆவது இடத்தையும் சீனா 76ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

வெறும் 11 மதிப்பெண்களுடன் சோமாலியா நாடு கடைசி இடத்தில் உள்ளது.

# நுளம்பு வலை நூல் இறுகி சிறுவன் பலி

சத்தமில்லாததை அவதானித்த பெற்றோர், வீட்டின் படுக்கை அறைக்குச் சென்று பார்த்தபோது, அங்கு சிறுவன் கழுத்து இறுகி கிடப்பதை பார்த்து உடனடியாக உறவினர்கள், அயலவர்களின் உதவியோடு புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். எனினும் குறித்த சிறுவன் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக பரிசோதனை செய்த வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மது ஹிசாம், மரண விசாரணையை நடத்தினார். கழுத்துப் பகுதி இறுகியமையால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்து சடலத்தை பொற்றோரிடம் ஒப்படைத்தார்.

# பாராளுமன்றில் பாலியல் சேஷ்டை: மூவருக்கு பிணை

இரண்டு அழகான பணிப்பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட, பாராளுமன்றத்தின் வீட்டு பராமரிப்பு திணைக்களத்தின் மூன்று இளநிலை ஊழியர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பாராளுமன்ற கனிஷ்ட ஊழியர் மூவரையும் தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு கடுவல நீதவான் சனிமா விஜேபண்டார செவ்வாய்க்கிழமை (30) உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் விசாரணையின் பின்னர், பாராளுமன்றத்தில் பணியாற்றிய இளைய ஊழியர்களான மூவர் சந்தேகத்தின் பேரில் செவ்வாய்க்கிழமை (30) கைது செய்யப்பட்டனர்.

கடந்த 2022ஆம் ஆண்டு பாலியல் துன்புறுத்தல் நடந்ததாகவும், பாலியல் துன்புறுத்தல் நடந்து சுமார் ஒரு வருடத்திற்குப் பிறகு இது தொடர்பான முறைப்பாடு பொலிஸாரிடம் அளிக்கப்பட்டதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# ஐவர் சுட்டுக்கொலை: இரண்டு பெண்கள் கைது

பெலியத்த பொலிஸ் பிரிவில் தெற்கு அதிவேக வீதி நுழைவாயிலுக்கு அருகில் ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரத்கம பிரதேசத்தில் ஹக்மன பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவினால் இவ்விருவரும் திங்கட்கிழமை (29) காலை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் புஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 23 மற்றும் 33 வயதுடையவர்கள் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டுக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு துப்பாக்கிகளும் குறித்த இரு பெண்களில் ஒருவருக்கு சொந்தமான மோட்டார் சைக்கிளில் கராப்பிட்டிய பிரதேசத்தில் இருந்து புஸ்ஸ பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

# அஸ்வெசும குறித்து அதிரடி அறிவிப்பு

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டத்தைக் கீழ்க்காணும் திருத்தங்களை உள்ளடக்கி நடைமுறைபப்டுத்துவதறகு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அஸ்வெசும பயனாளியாகத் தகைமை பெற்றவர்களில் இடர்களுக்கு உள்ளாகியுள்ள சமூகப் பிரிவுக்கான நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கான செல்லுபடிக் காலத்தை 2024.04.01 தொடக்கம் 2024.12.31 வரைக்கும், நிலைமாறுநிலை (பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக வருமானம் இழக்கப்பட்டுள்ள) நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கான செல்லுபடிக் காலத்தை 2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரைக்கும் நீடித்தல்,

தற்போதுள்ள இடர்களுக்குள்ளாகிய சமூகப் பிரிவு மற்றும் நிலைமாறு சமூகப் பிரிவு (பொருளாதார நெருக்கடியால் தற்காலிகமாக வருமானம் இழக்கப்பட்டுள்ள) போன்ற இரண்டு பிரிவுகளையும் ஒன்றிணைத்து எட்டு இலட்சம் குடும்பங்களுக்காக இடர்களுக்கு உள்ளாகியுள்ள பிரிவாக 2024.01.01 தொடக்கம் கருத்தில் கொண்டும், குறித்த குடும்பங்களுக்காக 5,000 கொடுப்பனவை 2024.12.31 வரைக்கும் செலுத்தல்,

தகவல்களை உறுதிப்படுத்தும் செயன்முறையின் பின்னர் அஸ்வெசும குடும்பங்களின் பட்டியலில் காணப்படாத அடையாளங் காணப்படாத சிறுநீரக நோயாளர்களுக்கு 7,500 ரூபாவும், மற்றும் இயலாமையுள்ள நபர்களுக்கு 7,500 ரூபாவும், மற்றும் முதியோர்களுக்கு 3,000 ரூபாவும் 2024 ஏப்ரல் மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தல்,

தற்போது கொடுப்பனவுகளைப் பெறுகின்றவர்களும், காத்திருப்புப் பட்டியலில் பதிவு செய்யப்பட்டவர்களில் அடையாளங் காணப்படாத சிறுநீரக நோயாளர்களுக்கு 7,500 ரூபாவும், மற்றும் இயலாமையுள்ள நபர்களுக்கு 7,500 ரூபாவும், மற்றும் முதியோர்களுக்கு 3,000 ரூபாவும் 2024.01.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டு இக்கொடுப்பனவுகளை அஸ்வெசும வேலைத்திட்டத்திற்கு வெளியே மாவட்டச் செயலாளர்கள்/பிரதேச செயலாளர்கள் மூலம் மேற்கொள்ளல்,

இரண்டாவது சுற்றுக்காக விண்ணப்பங்களைக் கோரல் 2024 முதலாம் காலாண்டில் ஆரம்பித்து 2024 ஜூன் மாதத்தில் நிறைவு செய்யப்பட்டு ஜூலை மாதம் தொடக்கம் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும், மேலதிகமாக தகைமைகளைப் பெறுகின்ற குடும்பங்களை உள்வாங்குவதற்கும் தகைமை பெறுகின்ற குடும்பங்களின் மொத்த எண்ணிக்கையை உயர்ந்த பட்சம் 2.4 மில்லியன்களாகத் திருத்தம் செய்தல்.

# தோரணை பேருந்துகளால் மக்கள் சிரமம்

ரஞ்சித் ராஜபக்ஷ




நுவரெலியா சுற்றுப்பயணத்திற்கு வரும் அதிகளவான ஒளி வடிவங்கள் மற்றும் சத்தம் உமிழும் பேருந்துகளால் தாங்கள் மிகவும் சிரமப்படுவதாக நுவரெலியா நகரின் ஏனைய வாகன சாரதிகள் மற்றும் பிரதேசவாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வார இறுதி விடுமுறை நாட்களில், நுவரெலியாவுக்கு சுற்றுலா வரும் ஏராளமான பேருந்துகள், மோட்டார் வாகன விதிமுறைகளை மீறி, பேருந்து முழுவதும் பிரகாசமான ஒளி வடிவங்கள், உரத்த ஒலி எழுப்பி, ஒலிபெருக்கிகளை ஏற்றி, நுவரெலியா முழுவதும் நிகழ்ச்சியை நடத்தி வருகின்றன. நுவரெலியா நகரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசிக்கும் நோயாளிகள், பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

நுவரெலியா நகருக்கு வரும் வாகனங்கள் தொடர்பில் நுவரெலியா போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சட்டத்தை மீறி அலங்கரிக்கப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பொதுமக்களின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நுவரெலியா தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாராச்சியிடம் நாம் கேட்டதற்குப் பதிலளித்த அவர், நுவரெலியாவிற்கு இனிமேல் வரும் இவ்வாறான பேருந்துகளில் அலங்கார ஏற்பாடுகள் மற்றும் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆராயப்படும் என்றார். மோட்டார் வாகன ஆணைக்கு மாறாகச் செயற்படும், அந்த பேருந்துகளின் உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்பதுடன் சட்டத்தைக் கடுமையாக அமல்படுத்தப்படும் என்றார்.

# தரிசனத்திற்கு சென்றவர் உயிரிழப்பு

செ.தி.பெருமாள்



சிவனொளிபாத மலை தரிசனத்திற்கு சென்ற வயோதிபர் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ள சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

தலங்கம பிரதேசத்தை சேர்ந்த-வெள்ளலஹேவாவின் பஞ்சிமஹத்தாயா (வயது 70) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தன்று குறித்த வயோதிபர் திடீரென சுகயீனமடைந்த நிலையில், மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்ப ட்டுள்ளதுடன், மேலதிக சிகிச்சைக்காக-டிக்கோயா-கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்த பின்னர் உயிரிழந்துள்ளதாக-நல்லதண்ணி பொலிஸ் பரிசோதகர் சாந்த வீரசேகர தெரிவித்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகணை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பன்றி இறைச்சியுடன் உணவக உரிமையாளர் கைது

ரஸீன் ரஸ்மின்



புத்தளம் - சேத்தபொல பிரதேசத்தில் உணவகம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 கிலோ கிராம் காட்டு பன்றி இறைச்சியுடன் குறித்த உணவகத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மதுரங்குளி - செம்பட்ட பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமானப்படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், பொலிஸாரின் ஒத்துழைப்புடன் வனவிலங்கு அதிகாரிகள் குறித்த உணவகத்தை சோதனையிட்ட போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த உணவகத்தில் மது அருந்த வருபவர்களுக்கு, காட்டுப்பன்றி உள்ளிட்ட வன விலங்குகளின் இறைச்சியை கறியாக தயாரித்து வருகின்றனர் என வனவிலங்கு அதிகாரிகளின் விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

மேலும் குறித்த உணவகத்தில் உள்ள குளிர்சாதனப் பெட்டியில் இருந்து காட்டுப் பன்றி இறைச்சியும் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் விற்பனை செய்தவருக்கு தடுப்புக்காவல்

ஆ.ரமேஸ்



நுவரெலியாவில் வட்ஸ்அப் மூலம் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த நபரை எதிர்வரும் பெப்ரவரி (02) வரை பொலிஸ் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றம் திங்கட்கிழமை (29) உத்தரவு பிறப்பித்துள்ளது.

முச்சக்கரவண்டி சாரதியான குறித்த நபர் ஞாயிற்றுக்கிழமை (28) இரவு நுவரெலியா பொலிஸாரால் 05 கிராம் மற்றும் 100 மில்லிகிராம் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கைத்தொலைபேசி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகளின்போது, குறித்த நபர் வட்ஸ்அப் செயலியின் ஊடாக போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளதுடன், பொலிஸாரினால் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது பெப்ரவரி (02) வரை தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# 5 மீனவர்கள் கைது

லெம்பட் ரொசேரியன்



மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு கடற்கரையில், தடை செய்யப்பட்ட இழுவை மடியை பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட 5 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்கள் பயன்படுத்திய இழுவை படகும் மீட்கப்பட்டுள்ளது.

கைதானவர்கள் விடத்தல் தீவு மக்கள் மற்றும் கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர்களால் திங்கட்கிழமை (29) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் எருக்கலம்பிட்டி மற்றும் உப்புக்குளம் பகுதியை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், விடத்தல் தீவு இறங்கு துறையில் இழுவை படகு நிறுத்தப்பட்டுள்ளதோடு, மேலதிக நடவடிக்கைக்காக 5 மீனவர்கள் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஹெராயினுடன் இருவர் கைது

எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம்-இளவாலை பகுதியில் ஹெராயினுடன் போதைப்பொருளுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளவாலை-பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், இரு இளைஞர்களை கைது செய்து சோதனையிட்ட போது, குறித்த இருவரிடம் இருந்து, தலா 20 மில்லி கிராம் ஹெராயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.

மேலும், குறித்த இருவரையும் இளவாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து, விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக-பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஐஸுடன் பெண் கைது

க.அகரன்



வவுனியாவில் ஐஸ் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் விசேட அதிரடிப்படையினரால் செவ்வாய்க்கிழமை (29) கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா- வேப்பங்குளம் பகுதியில் வசிக்கும் பெண்ணொருவர், ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாக விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து, அவரை, வைரவபுளியங்குளம் புகையிரத நிலைய வீதியில் வைத்து, 920 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண், வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் எனவும் மேலதிக விசாரணைகளின் பின் குறித்த பெண்ணை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மரத்திலிருந்து தவறி விழுந்த நபர் மரணம்

சுமணசிறி குணதிலக்க



தொம்பகஹவெல பகுதியிலுள்ள வீடொன்றின் தோட்டத்தில் மரக் கிளைகளை வெட்டிக்கொண்டிருந்த நபர் ஒருவர் மரத்திலிருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ள சம்பவமொன்று திங்கட்கிழமை (29) பதிவாகியுள்ளது.

தம்பகல்ல பகுதியைச் சேர்ந்த-மூன்று பிள்ளைகளின் தந்தையான ரத்நாயக்க முதியன்செலாகே ஜயலத் (வயது 35) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் 35 தொம்பகஹவெல பிரதேசத்தை சேர்ந்த ஒருவரின் வீட்டு தோட்டத்தில் உள்ள தேக்கு மரங்களின் கிளைகளை வெட்டும் போது, மரத்திலிருந்து கீழே விழுந்துள்ளதுடன், சிகிச்சைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் தொம்பகஹவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் உள்ளக விளையாட்டு அரங்கு

எஸ். தில்லைநாதன்



யாழ்ப்பாணத்தின் பொதுவான உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பது தொடர்பில் அமைச்சு கரிசனையாகவே உள்ளது என இளைஞர் விவகார மற்றும் விளையாட்டு துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தேசிய நீதிமன்றத்தில் சாதனை புரிந்த வடக்கு மாகாண வீர வீராங்கனைகளை கௌரவிக்கும் வர்ண இரவு நிகழ்வில் உரையாற்று ம்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "நான் அமைச்சின் செயலாளராக பதவியேற்றபோது, என்னை தொடர்பு கொண்ட யாழ்ப்பாண மாவட்ட உதவி பணிப்பாளர் வினோதினி, யாழில் உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றை அமைத்து தருமாறு கோரினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள விளையாட்டு அரங்கை அமைப்பது தொடர்பில் எமது அமைச்சு கரிசனையாகவே உள்ளது அதற்கான இடத்தையும் திட்டச் செலவுகளையும் மதிப்படுமாறு மாவட்ட உதவி பணிப்பாளரிடம் கூறியுள்ளேன்.

தற்போது அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்குள் இருக்கின்ற நிலையில், அமைத்தினால் பாரிய நிதிய ஒதுக்கீடுகளை மேற்கொள்வதில் சிரமம் இருக்கிறது.

ஆனாலும், யாழ்ப்பாணத்தில் உள்ள விளையாட்டு அரங்கை அமைப்பது தொடர்பில் வெளிநாட்டு நிறுவனங்கள் புலம்பெயர் கொடையாளர்களிடமி ருந்து உதவிகளைப் பெறமுடியும்.

வடக்கிலிருந்து தேசியப் போட்டிகளுக்காக தெற்கு நோக்கி வருகை தரும் வீரர்கள் பல்வேறு சிரமங்கள் மத்தியில் போட்டிகளில் கலந்து கொள்வதை தொடர்ச்சியாக அவதானிக்க முடிகிறது. இவ்வாறு பல சிரமங்கள் இருந்தாலும் தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் அவர்களை தேசிய நீதியில் சாதிக் வைத்துள்ளது.

நாட்டின் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய அமைச்சின் புதிய செயல் திட்டமாக கிராமத்தில் இருந்து மாவட்டத்திற்கு மாவட்டத்திலிருந்து மாகாணத்துக்கு மாகாணத்தில் இருந்து தேசியம் சர்வதேசம்வரை வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு புதிய திட்டத்தினை ஒவ்வொரு பிரதேச செயலகத்திலிருந்து தயார் செய்து நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

ஆகவே, யாழ்ப்பாண மாவட்ட வீரர்களுக்கு உள்ளக விளையாட்டுகளில் தேசிய நீதியில் சாதிப்பதற்கு மைதானம் இல்லை என்பது குறையாக இருந்தாலும் அதனை நிவர்த்தி செய்வதற்கு எங்களால் ஆன பங்காளிப்பை வழங்குவோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊழல் மிகுந்த நாடுகளின் பட்டியலில் இலங்கையின் நிலை

இந்த நாடு, பொருளாதார ரீதியில் இவ்வளவு வங்குரோத்து அடைந்தமைக்கான காரணகர்த்தாக்கள் யார்? என்பதை தெட்டத்தெளிவாக எடுத்தியம்பிய இலங்கையின் உயர்நீதிமன்றம், அவர்களின் பெயர் பட்டியலையும் அம்பலப்படுத்தியது.

இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர்களான மஹிந்த மற்றும் பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட 7 பேர் மேற்கொண்ட தவறான பொருளாதார மேலாண்மைத் தீர்மானங்களே காரணம் என இலங்கை உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் பேராசிரியர் டப்ளியு.டி. லக்ஷ்மன் ஆகியோரும் உள்ளடங்கியுள்ளனர்.

அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனக் கோரிய எதிர்க்கட்சியினர், அவர்களின் பிரஜா உரிமையைப் பறிக்குமாறும், வலியுறுத்தின. எனினும், எவற்றையும் அரசாங்கம் தனது காதுகளுக்கு எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

இந்நிலையில்தான், 2023ஆம் ஆண்டில் உலகில் ஊழல் மிகுந்த நாடுகள் கொண்ட பட்டியலை அரசு சாரா அமைப்பான 'டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்' என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது. நிர்வாக வெளிப்படைத்தன்மை, இலஞ்சம், ஊழல் மற்றும் முறைகேடுகள் போன்றவற்றைக் காரணிகளாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இந்த காரணிகளின் அடிப்படையில் 100-க்கு 100 மதிப்பெண்கள் பெறும் நாடு ஊழலற்ற நாடு என்ற வகையில் தரவரிசைப் பட்டியலில் முதலிடம் வழங்கப்படுகிறது. பூஜ்ஜியம் (0) மதிப்பெண் பெறும் நாடு ஊழல் மிகுந்த நாடாகக் குறிப்பிடப்படுகிறது.

அவ்வகையில் மொத்தம் உள்ள 180 நாடுகளில் எந்த நாடும் 100-க்கு 100 மதிப்பெண் பெறவில்லை. அதாவது உலகம் முழுவதும் ஊழல் இருப்பதை இந்த பட்டியல் காட்டுகிறது. 90 மதிப்பெண் பெற்ற டென்மார்க் ஊழல் மிகவும் குறைந்த நாடாக முதலிடத்தைப் பிடித்துள்ளது. 87 மதிப்பெண்களுடன் பின்லாந்து 2ஆம் இடத்தையும், 85 மதிப்பெண்களுடன் நியூசிலாந்து 3ஆம் இடத்தையும் பிடித்துள்ளன.

2022ஆம் ஆண்டு 85ஆவது இடத்தில் இருந்த இந்தியா இந்த ஆண்டு 93ஆவது இடத்திற்குப் பின்தங்கியுள்ளது. கடந்த ஆண்டு 40 மதிப்பெண்கள் பெற்றிருந்த நிலையில், இந்த ஆண்டு 39 மதிப்பெண்கள் பெற்றுள்ளது. இதேபோல் கசகஸ்தான், லெசோத்தோ, மாலத்தீவு ஆகிய நாடுகளும் 39 மதிப்பெண்களுடன் இந்தியாவுடன் 93ஆவது இடத்தை பகிர்ந்துகொண்டுள்ளன.

பாகிஸ்தான் இந்தப் பட்டியலில் 133ஆவது இடத்தையும், இலங்கை 115ஆவது இடத்தையும் சீனா 76ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. வெறும் 11 மதிப்பெண்களுடன் சோமாலியா நாடு கடைசி இடத்தில் உள்ளது. மொத்தத்தில் ஊழலற்ற நாடே இல்லை எப்பதே உண்மை.

இலங்கையை பொறுத்தவரையில் பல நாடுகளின் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டே இங்குச் சட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அல்லது திருத்தம் செய்யப்படுகின்றன. பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் கூட, சிங்கப்பூரின் சட்டத்தை அடிப்படையாக வைத்து நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில், ஊழல் எதிர்ப்பு சட்டத்துக்கு எந்த நாட்டை முன்னுதாரணமாக எடுக்கப்போகிறது என்பதே எம் முன்னிருக்கும் கேள்வியாகும்.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்க்குக் கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவரிடமும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, அன்பான நட்பின் வழியைக் கைப்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்கலாம் என்பது முடியாத காரியமாகும். வெறுப்புதான் மிஞ்சும். துன்பங்களை உடைக்க, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம். உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசும்போது அது ஏற்படும்.

மனிதனுடன் மட்டுமல்ல; மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கே கேடானவை, பதற்றம் வேண்டாம், சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை வணங்கும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

நன்றி -பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# ஸ்ரீதரன் எதிர்நோக்கும் சவால்கள்



எம்.எஸ்.எம். ஐயூப்

தமிழர்களின் அரசியலைப் பற்றிய சில தென் பகுதி ஊடகவியலாளர்களின் அறிவு எந்தளவு என்பதை அவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவைப் பற்றி கடந்த 21ஆம் திகதி எவ்வாறு அறிக்கையிட்டார்கள் என்பதன் மூலம் தெரிகிறது. அவர்கள் ததமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இலங்கை தமிழ் அரசு கட்சியையும் குழப்பிக் கொண்டே செய்தியை வெளியிட்டு இருந்தார்கள். 1949ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு சொற்ப காலம் சென்றதிலிருந்து இலங்கையில் பிரதான தமிழ்க் கட்சியாக இருக்கும் தமிழரசுக் கட்சி இலங்கை வரலாற்றில் முக்கிய திருப்பங்களை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றியிருக்கும் நிலையிலேயே சில தென்பகுதி ஊடகவியலாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக ஸ்ரீதரன் தெரிவு செய்யப்பட்டார் என்று அறிக்கையிட்டு இருந்தார்கள்.

இதனை ஆச்சரியமாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. ஏனெனில், தென் பகுதியில் இடம்பெறும் சில அரசியல் நடவடிக்கைகள் மற்றும் நகர்வுகளைப் பற்றி தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் போதிய அறிவு இல்லாமல் இருந்ததையும் கடந்த காலத்தில் கண்டோம்.

உதாரணமாக 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிட்ட நிலையில், சிங்கள பௌத்த மக்களில் ஒரு சாரார் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நாகர் உலகிலிருந்து களனி விகாரைக்கு ஒரு நாகம் வந்த கதையைப் பற்றி பெரும்பாலான தமிழர்கள் அறிந்திருக்க மாட்டார்கள்.

நிலத்துக்கடியில் இருப்பதாகக் கூறப்படும் நாகர் உலகிலிருந்து ஒரு நாகம் புத்தரின் அடையாளச் சின்னங்களைத் தாங்கிய வண்ணம் களனி கங்கை ஊடாக வெளியே வந்து அச்சின்னங்களை மற்றொருவர் மூலம் தம்மிடம் கையளித்ததாகவும் அது தேசத்தையும் பௌத்த சமயத்தையும் பாதுகாப்பதற்காக ஒரு புதிய தலைவர் வருகிறார் என்பதற்கான அடையாளமாகவே நிகழ்ந்தது என்றும் களனி மகா விகாரையின் பிரதம மதகுரு ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அதனைப் பொதுஜன முன்னணிக்கு ஆதரவான ஒரு தொலைக்காட்சி நிறுவனம் முக்கிய செய்தி என்று கூறி எவ்வித சந்தேகமும் இல்லாத செய்தியைப் போல் ஒளிபரப்பியது. இந்த வீடியோ இன்னமும் யூடியுப்பில் பார்க்கலாம்.

இச்செய்தி பௌத்தர்களில் ஒரு சாரார் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்று கூறப்படுகிறது. அதேபோல், ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் யார் என்று கேட்டால் சிலவேளை பலருக்குத் தெரியாதிருக்கலாம்.

தமிழரசுக் கட்சியைப் பற்றி அறியாத தென்பகுதி இளைய தலைமுறை ஊடகவியலாளர்கள் இனப் பிரச்சினை போன்ற சிக்கலான ஒரு விடயத்தைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்று நம்ப முடியாது. ஆனால் அவர்கள், அக்கட்சியை அறியாதிருக்க அல்லது தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்று தான் என்று நினைக்க நிறையக் காரணங்கள் இருக்கின்றன.

இலங்கை தமிழரசு கட்சி 1949ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ஆரம்பக் காலத்தில் தென் பகுதியில் அது 'பெடரல் பக்ஷய' (சமஷ்டி கட்சி) என்றே அழைக்கப்பட்டது. அதனை அடுத்து 1972ஆம் ஆண்டு முதல் தமிழரசு கட்சி மூன்று கூட்டணிகளின் பிரதான கட்சியாக இருந்தது. 1972ஆம் ஆண்டு முதல் 1976ஆம் ஆண்டு வரை தமிழர் ஐக்கிய முன்னணியினதும் 1976ஆம் ஆண்டு முதல் 2001ஆம் வரை தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினதும் (கூட்டணியினதும்) 2001ஆம் ஆண்டு முதல் இன்று வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் பிரதான உறுப்புக் கட்சியாக இருந்தமையால் அதன் பெயர் அரிதாகவே ஊடகங்களில் காணப்பட்டது.

2001ஆம் ஆண்டு முதல் தேர்தல் காலங்களில் அதன் பெயர் ஓரளவுக்கு வெளியே தெரிய இருந்தது. ஏனெனில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழரசு கட்சியின் சார்பாக அதன் சின்னத்தின் கீழேயே போட்டியிட்டனர். 1980களின் ஆரம்பத்திலிருந்து தமிழ் அமைப்புக்களுக்கும் அரச படைகளுக்கும் இடையே போர் மூண்டதால் தமிழரசு கட்சி போன்ற கட்சிகளுக்கு ஊடகங்களில் இடம் கிடைக்கவே இல்லை. இவ்வனைத்து காரணங்களாலும் தமிழரசுக் கட்சி என்பது ஏதோ புதிய கட்சியொன்றைப் போல் தெற்கில் சிலர் காணலாம்.

தமிழரசுக் கட்சியின் தலைவரைத் தெரிவு செய்வதற்காக இதற்கு முன்னர் ஒருபோதும் போட்டி நடைபெறவில்லை. பொது உடன்பாட்டிலேயே தலைவர் தெரிவு செய்யப்பட்டு வந்துள்ளார். இம்முறை தேர்தலானது யார் சிறந்த தமிழ்த் தேசியவாதி என்பதைத் தெரிவு செய்வதற்கான தேர்தலாகவே தெரிந்தது.

தேர்தலுக்கு முன்னர் வெளியான தமிழ் பத்திரிகைகளிலும் இது தெரிய இருந்தது. அந்த வகையில் ஸ்ரீதரனுக்கான வெற்றி வாய்ப்பு அதிகமாகவே இருந்தது. சில தமிழ் ஊடகங்கள் ஸ்ரீதரன் உள்நாட்டுப் போரின் அதிக வடுக்களை சுமந்துகொண்டிருப்பவர் என்றும் சுமந்திரன், சம்பந்தனின் சிபார்சின் பேரில் அரசியலுக்கு வந்து தமிழ்த் தேசியத்துக்குள் புதியவராக அறிமுகமான புதிய தமிழ்த் தேசிய பற்றாளர் என்றும் குறிப்பிட்டன.

தென்பகுதி ஊடகங்களும் அரசியல்வாதிகளும் எப்போதும் தமிழ்த் தேசியவாதத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியலாகவே காண்கின்றனர். கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட உடன் ஸ்ரீதரன் போரில் கொல்லப்பட்டோருக்கு அஞ்சலி செலுத்தியமை ஏதோ ஓர் ஆபத்தான சகுனமாகச் சிலர் பார்ப்பதாகவே தெரிந்தது.

மூன்று தசாப்தங்களாக வான் தாக்குதல்களாலும் பீரங்கித் தாக்குதலாலும் பல்லாயிரக் கணக்கானவர்கள் கொல்லப்பட்ட ஒரு மண்ணில் அந்த கொலைகள் இடம்பெறும்போது, அதற்கு சாட்சியாக இருந்த ஒருவர் புதியதோர் அரசியல் பயணத்தை ஆரம்பிக்கும்போது, தாம் கடந்து வந்த அந்த கொடுமையான பாதையை மறக்க மாட்டார் என்பது எவரும் பரிந்துகொள்ள வேண்டிய யதார்த்தமாகும். ஆனால், அந்த அனுபவம் இல்லாத காரணத்தால் ஒருவர் அதனைப் புரிந்துகொள்ளாமலும் இருக்கலாம். அதனையே தென்பகுதியில் காண முடிந்தது.

இது சிறந்த தேசியவாதியைத் தெரிவு செய்யும் தேர்தல் என்ற அடிப்படையிலேயே வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் கருத்து தெரிவித்து இருந்தார். தேர்தல் முடிவுகள் வெளியான உடன் கருத்து தெரிவித்த அவர், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராகச் சிவஞானம் ஸ்ரீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளதன் மூலம் தமிழ்த் தேசியம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் தமிழ்த் தேசியம் அழிந்துவிடக்கூடாது என்பதில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் உள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறியிருந்தார்.

கட்சித் தலைவரைத் தெரிவு செய்யும் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுடன் போட்டியிட்டு ஸ்ரீதரன் வெற்றி பெற்ற நிலையிலேயே அவர் இக்கருத்துக்களைத் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தேர்தல் முடிவின் பின்னர் கருத்து தெரிவித்த ஸ்ரீதரன், சுமந்திரனுடனும் தேர்தலுக்குச் சற்று முன்னர் போட்டியிலிருந்து விலகிக்கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனுடனும் இணைந்து தமிழ்த் தேசியத்தின் ஒவ்வோர் அங்குல இருப்புக்காகவும் பொறுப்புடன் செயற்படுவதாக என்று கூறியிருந்தார்.

அதேபோல், சுமந்திரனும் புதிய தலைவர் ஸ்ரீதரனுக்கு முழுமையான ஆதரவை வழங்கி தொடர்ந்தும் ஒற்றுமையாகப் பயணிப்போம் என்று கூறியிருந்தார்.

இவ்விருவரின் இக்கருத்துக்கள் வெறும் சம்பிரதாயத்துக்கானதாக இருக்கக்கூடாது. ஏனெனில், அக்கருத்துக்களால் அவர்கள் உலகுக்கு எடுத்துரைக்கப் போகும் ஐக்கியமானது காலத்தின் கட்டாயமாக இருக்கிறது. இது தமிழ்ச் சமூகத்துக்கு மட்டுமன்றி முஸ்லிம் சமூகத்துக்கும் பொருத்தமானதாகும்.

இன்று இலங்கை தமிழ் அரசியலானது முன் நகர முடியாத ஒரு நெருக்கடியில் சிக்கியிருப்பதாகவே தெரிகிறது. தமது இருப்பை பாதிக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடி சாத்வீகமாகப் பல தசாப்தங்களாக போராடி வந்த தமிழ் தலைவர்கள் அப்போராட்டம் தோல்வியடையவே பிரிவினையைக் கோரினர்.

பிரிவினைப் போராட்டம் மரபு ரீதியான கட்சிகளை பின் நோக்கித் தள்ளிவிட்டு இளைஞர்களிடம் சென்றடைந்தது. அப்போராட்டமும் பெரும் அழிவோடு தோல்வியடைந்தது. இப்போது மீண்டும் ஜனநாயக ரீதியாக சமஷ்டி ஆட்சி முறையைக் கோருகிறார்கள். அதற்கு நாட்டின் ஆட்சியாளர்கள் எவரும் தயாராக இல்லை. மீண்டும் ஆயுதப் போராட்டத்துக்குப் போகவும் முடியாது. ஜனநாயக போராட்டமும் ஓரிடத்திலேயே தேங்கிக் கிடக்கிறது. இது ஒரு நெருக்கடியான நிலைமையாகும்.

இந்த விடயத்தில் தமிழ் அரசியல் கட்சிகளிடையிலான போட்டாபோட்டியும் நிச்சயமாகச் சிந்தனைக்குத் தடையாகவே கருத வேண்டியுள்ளது.

போராட்ட வடிவங்கள் மற்றும் சுலோகங்கள் தொடர்ந்தும் பயனளிக்காவிட்டால், அவற்றை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

அதாவது, ஆயுதப் போராட்டத்துக்கு மீண்டும் போகவேண்டும் என்பதல்ல. ஆனால், தென் பகுதியிலும் சர்வதேசத்திலும் புதிய நண்பர்களைத் தேடலாம். தென் பகுதி பொருளாதார போராட்டங்களோடு தமிழர்களின் பிரச்சினைகளையும் இணைக்க வாய்ப்பு இருக்கிறதா என்று ஆராயலாம். கடந்த வருடம் இடம்பெற்ற 'அரகலய' போராட்டத்தின்போது, ஓரளவுக்குத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தெற்கே எடுத்துச் செல்லப்பட்டன.

இவற்றைத் தான் செய்ய வேண்டும் என்பதல்ல. தமிழர்களும் முஸ்லிம்களும் புதிதாக (out of the box) சிந்திக்க வேண்டிய கட்டாயத்தை எதிர்நோக்கியிருக்கிறார்கள் என்பதையே இங்குச் சுட்டிக்காட்டப்படுகிறது.

அத்துடன், கட்சிகளாகப் பிரிந்து இதனைச் செய்யப்போகும்போது, மற்றைய கட்சிக்காரர்களின் குற்றச்சாட்டுக்கள் மற்றும் முத்திரை குத்தல்கள் பற்றிய அச்சத்துடனேயே அதனைச் செய்ய வேண்டியுள்ளது. எனவே தான், கட்சிகளின் ஒற்றுமை ஊடாக ஒரு கூட்டுப் பயணம் அவசியமாகிறது.

## கடிதங்கள்

### இயங்க வையுங்கள்

கிளிநொச்சி - ஆனைவிழுந்தான் கிராமத்தில் இயங்காதுள்ள சந்தை மற்றும் திறக்கப்படாதுள்ள கடைத் தொகுதி தொடர்பாக கிராம மக்களினால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

2010ஆம் ஆண்டின் பின்னர் அமைக்கப்பட்ட சந்தை தற்போது இயங்காது உள்ளது. 2022ஆம் ஆண்டில் இச்சந்தை வளாகத்தில் கடைத்தொகுதியும் அமைக்கப்பட்டு இதுவரை திறக்கப்படாமல் உள்ளது.

கரைச்சி பிரதேச சபையினால் இக்கட்டடங்கள் அமைக்கப்பட்டன. பெருமளவு நிதியில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் தற்போது கால்நடைகளின் உறைவிடமாக மாறி உள்ளன.

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராமங்களில் சந்தைகள் இல்லாத நிலையில், இயங்கிய ஆனைவிழுந்தான் சந்தையும் தற்போது இயங்காது உள்ளது.

சந்தையினை இயங்க வைப்பதிலும் கடைத் தொகுதிகளை திறந்த வைப்பதிலும் கரைச்சி பிரதேச சபை மந்த கதியில் செயற்படுகின்றது என தெரிவிக்கும் அப்பகுதி பொது அமைப்புகள், சந்தையினை இயங்க வைப்பதற்கும் கடைத் தொகுதிகளை திறப்பதற்கும் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராமங்களில் 1,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழும் நிலையில், இரு கிராமங்களிலுள்ள மக்கள் 12 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஸ்கந்தபுரம் சந்தைக்கும் 30 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கிளிநொச்சி பொது சந்தைக்கும் பொருட்களை வாங்கச் செல்கின்றனர்.

ஆனைவிழுந்தான் சந்தையினையும் கடைத் தொகுதியினையும் இயங்க வைப்பதன் மூலம் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் மக்கள் பயனடைவார்கள். இதற்கான நடவடிக்கைகளை கரைச்சி பிரதேச சபை எடுக்க வேண்டும் என்பதே இப்பகுதி மக்களின் கோரிக்கையாகும்.

- நடராசா கிருஸ்ணகுமார்




## கலந்தாய்வு

திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பகுதியில் காணப்படும் சமூக மட்ட பிரச்சினைகள் தொடர்பான கலந்தாய்வு திருகோணமலை விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தில் செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்றது.

இதில் மூதூர், தம்பலகாமம்,திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பகுதிகளை உள்ளடக்கிய துறை சார் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டுள்ளதுடன் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட வட்டமேசை கலந்துரையாடல் ஒதுக்கப்பட்ட சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள்,சிறுவர் இளைஞர்கள், சமூக நல்லிணக்கம் உள்ளிட்ட பல பிரச்சினைகளை அடையாளங் கண்டு அதனைத் தீர்ப்பதற்கான வழி முறைகளைக் கையாள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட பெண்கள் சமாசம், அமரா பெண் தலைமை தாங்கும் குடும்பங்களின் ஒன்றியம், *Trincomalee Active Citizen Group* மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான அமைப்புக்களும் கலந்து கொண்டன.

- ஏ.எச்.ஹஸ்பர்




## மகாத்மா காந்தியின் 76 ஆவது சிரார்த்த தினம்

உலகுக்கு அகிம்சையை போதித்த மகாத்மா காந்தியின் 76ஆவது சிரார்த்த தினம் அனுஷ்டிப்பு மட்டக்களப்பு-காந்தி பூங்காவில் அமைந்துள்ள காந்தியடிகளாரின் நினைவுத் தூபியில் புதன்கிழமை (30) இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு-காந்தி சேவா சங்கத்தின் தலைவர் கலாநிதி அ.செல்வேந்திரனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், காந்தியடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதன்போது, மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் செயலாளர் க.பாரதிதாசன் உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

- வா.கிருஸ்ணா




## அயிஸ்லேபிக்கு நடமாடும் நூலகம்

பண்டாரவளை - அயிஸ்லேபி தமிழ் மகா வித்தியாலயத்தில் நூலகமொன்றை ஏற்படுத்தும் முகமாக, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார், இலங்கை போக்குவரத்து சபையிடம் (CTB) பாவனையில் இல்லாத இரண்டு பேருந்து வண்டிகளை தந்துதவுமாறு கோரியிருந்தார். ரூ. 10 இலட்சம் செலுத்தினால் 2 பேருந்து வண்டிகளை வழங்க முடியுமென, இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.




## வீர வீராங்கனைகள் கௌரவிப்பு...

தேசிய ரீதியில் நடைபெற்ற மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளில் சாதனை புரிந்த வடக்கு மாகாண வீர வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு சுதுமலையில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபம் ஒன்றில் சனிக்கிழமை (27) நடைபெற்றது.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டுள்ளதுடன் சிறப்பு விருந்தினராகத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் பசிந்து குணவர்தன கலந்துகொண்டுள்ளார். மேலும் , யாழ்ப்பாண இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் வினோதினி சிறிமேனன், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களின் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவிப் பணிப்பாளர்கள், இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்கள், இளைஞர் யுவதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர்.

- பு. கஜிந்தன்

# கொத்துவேலி கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழா




கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், கொத்துவேலி கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா திருகோணமலை நகராட்சி மன்ற மண்டபத்தில் எதிர்வரும் 07ஆம் திகதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

எழுத்தாளரும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளருமாகிய ச.நவநீதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவின் வரவேற்புரையை, எண்ணம்போல் வாழ்க்கை இலக்கிய மன்றத் தலைவரும் எழுத்தாளருமான கனக தீபகாந்தனும், நூல்பற்றிய சிறப்பு நயவுரையினை ஓய்வுநிலை அதிபர் கவிஞர் இரா இரத்தினசிங்கமும், நூலாசிரியர் பற்றிய உரையினை கிழக்கு மாகாண சமூகசேவைத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எழுத்தாளர் இரா.கி.இளங்குமுதனும் வழங்கவுள்ளனர்.

இந்நூல் வெளியீட்டு விழாவுக்குக் கிழக்கு மாகாண பிரதம செயலாளர், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, கல்வியமைச்சு, விவசாய அமைச்சு, முதலமைச்சு, வீதி அபிவிருத்தி அமைச்சு போன்ற அமைச்சுக்களின் செயலாளர்கள், ஆளுநர் செயலக செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண திணைக்களங்களின் மாகாணப் பணிப்பாளர்கள், மாகாண ஆணையாளர்கள், நிறுவனத் தலைவர்கள், திருமலை வளாக முதல்வர் உள்ளிட்ட பல எழுத்தாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# ‘யாரும் பாடலாம் என்னை’

## கவிதை நூல் வெளியீடு


■ மு. தமிழ்ச்செல்வன்

இயல்வாணன் எழுதிய ‘யாரும் பாடலாம் என்னை’ கவிதை நூலின் வெளியீட்டு விழா கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் வியாழக்கிழமை (25) மாலை நடைபெற்றது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், தாயகம் சஞ்சிகை ஆசிரியருமான க.தணிகாசலத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வெளியீட்டுரையினை எழுத்தாளர் சட்டத்தரணி சோ.தேவராஜா நிகழ்த்தி நூலை வெளியிட்டு வைத்தார்.

நூலின் முதற்பிரதியை நூலாசிரியரின் மாமி திருமதி தாமோதரமாபிள்ளை சிவபாக்கியம் பெற்றுக் கொண்டார். மதிப்பீட்டுரைகளை பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை ஆசிரியரான எழுத்தாளர், விமர்சகர் ந.குகபரனும்,கிராமசேவகரான கவிஞர் வ.வடிவழகையனும் நிகழ்த்தினர். ஏற்புரையினை வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளரான கவிஞர் இயல்வாணன் நிகழ்த்தினார்.

நிகழ்வை கலாசார உத்தியோகத்தர் ச.தனுஜன் தொகுத்து வழங்கினார். நிகழ்வில் எழுத்தாளர்கள், கலைஞர்கள், வாசகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.







# இரு புத்தகங்கள் வெளியீட்டு வைப்பு









■ வரின்பராஜா சுபேஷ், எம் எஸ் எம் நூர்தீன்

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் நடத்தும் முன்னால் கிழக்கு மாகாண முன்பள்ளி பணியகத்தின் தவிசாளர் பொன்.செல்வநாயகத்தின் இரு புத்தகங்களின் வெளியீட்டு நிகழ்வு மட்டக்களப்பில் சனிக்கிழமை (27) இடம்பெற்றது.

தமிழ் - சிங்கள மொழிகளிலான “முன்பள்ளிக் கல்வி” எனும் இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வானது அரசடி தேவநாயகம் மண்டபத்தில் வைத்திய நிபுணர் வ.வரணீதரன் தலைமையில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்ட நிகழ்வானது நூலாசிரியரின் வரவேற்புடன் ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டு நிகழ்வானது மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளீதரன்,

கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் மா.செல்வராசா, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மூ.கோபாலரத்தினம் ஆகியோர் விசேட விருந்தினர்களாக வருகைதந்தனர்.

சர்வதேச முன் பிள்ளைக் கல்வி அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் நாயகமும் முன்பிள்ளைப்பள்ளி நிபுணருமாகிய கலாநிதி ஜெயலத் இலங்கக்கோன், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் சீ.பிரகாஷ், கிழக்கு பல்கலைக்கழக ஆரம்ப சௌக்கிய பீட தலைவர் வைத்திய கலாநிதி கே.அருளானந்தம், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் வ.கருணைநாதன், பிரதேச செயலாளர் கா.சித்திரவேல், கணக்காய்வு அத்தியட்சகர் ஏ.எம். மாஹீர், முன்னால் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்ட நிகழ்வில் கல்வி அதிகாரிகள் ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்திருந்தனர்.

இந்நூல்களின் முதல் பிரதியினை தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சைவப் புரவலர் வீ.ரஞ்சிதமூர்த்தி அவர்கள் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக்கொண்டதுடன், அதிதிகளுக்கு நூலாசிரியரினால் சிறப்புப் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், அதிதிகளின் சிறப்புரைகளைத் தொடர்ந்து நூலாசிரியரின் ஏற்புரை இடம்பெற்றது.



# நாகர்கோவிலில் மரம் நடுகை




யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய முற்பகுதி வீதி தொடக்கம் கண்ணகை அம்மன் கோவில் முன் பிரதான வீதியோரமாக உள்ள சதுப்பு நிலத்தை அண்டிய பகுதிகளில் மருத மரம் நடுகையை நாகர்கோவில் கிராம லியோ இளைஞர் அணியினரால் திங்கட்கிழமை (29) முன்னெடுத்துள்ளனர்.

“மரம் வளர்ப்போம் பசுமையான இயற்கையைப் பேணுவோம்”என்ற தொனிப் பொருளில் குறித்த இளைஞர்களால் இச் செயற்றிட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

- எஸ்.தில்லைநாதன்

## வணபிதா பிலேந்திரனின் ஆய்வுப்புலமையை அடையாளப்படுத்தும்

# ‘போர்த்துக்கேயர் ஆட்சியில் இலங்கையில் கத்தோலிக்கம்’



**க.ஜெயதீஸ்வரன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**வரலாற்றுத்துறை**
**பேராதனைப்பல்கலைக்கழகம்**

### Sh அறிமுகம்

இப்பூமிப்பந்து தோற்றம்பெற்றது முதல் அதற்கும் அதில் வாழும் உயிர்களுக்கும் அங்கு காணப்படும் பொருட்களுக்கும் அவற்றுடன் தொடர்புபட்டவகையில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கும் ஓர் வரலாறு உண்டு. அவ்வரலாற்றை வெளிப்படுத்தும் பணியில் ஈடுபடுவதென்பது இலகுவான காரியமல்ல. ஏனெனில் ஏற்கனவே இறந்தகாலத்தில் நடைபெற்று முடிந்த ஒரு நிகழ்வை நிகழ்காலத்தில் எடுத்துக் காட்டும்போது அதற்கான ஆதாரங்களைத் தேடுவதும் அவற்றின் உறுதித்தன்மையைப் பரிசீலிப்பதும் அதன் பின்பே அவற்றை அடிப்படையாகக்கொண்டு வரலாற்றை வரைவதென்பது கடினமான பணியாகும்.

இதேவேளை அவ்வரலாற்றை வரைகின்ற நபரது விருப்பு வெறுப்புக்களும் இவ்விடத்தில் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாக இருப்பதால் அவற்றிலிருந்து விலகி வரலாற்றை எழுதுவது அவசியமாகும். மேலும் வரலாற்றை வரைபவரது திறமைகள் மற்றும் திறன்களும் அவ்வரலாற்று நூலின் தரத்தை வெளிப்படுத்துவதால் அதற்கான தகுதியை வரலாற்றாசிரியன் பெற்றிருக்க வேண்டும் என்பது மற்றொரு சிறப்பாகும். இவ்விடத்தில் எச். கார் என்ற ஆங்கில தேச அறிஞன் வரலாறு தொடர்பில் குறிப்பிட்ட சிலதகவல்களைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகின்றேன். இவர் வரலாறு தொடர்பில் பல்வேறு தகவல்களை உள்ளடக்கி வரலாறு என்றால் என்ன என்ற நூலை வெளியிட்டு இருபதாம் நூற்றாண்டு வரலாற்று மரபில் புதிய சிந்தனைகளைத் தூண்டிவிட்டார். அவர் தனது நூலில் வரலாற்றில் ஆதாரங்களது முக்கியத்துவம், ஆதாரங்களது உண்மைத்தன்மை, மற்றும் வரலாற்று ஆசிரியனது பங்கு மற்றும் ஓர் வரலாற்று நூலைப் படிப்பதற்கு முதல் அதன் ஆசிரியரை அறிந்து கொள்ளவேண்டும் போன்ற பல விடையங்களை குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான சில வரம்புகள் வரையறைகளைக் கொண்டே வரலாற்று நூல்களைப் பார்ப்பதென்பது சிறந்ததாக அமையும். இந்தவகையிலேயே வண.பேராசிரியர். பிலேந்திரன் அவர்களது வரலாற்று நூலான போர்த்துக்கேயரின் ஆட்சியில் இலங்கையில் கத்தோலிக்கம் என்ற நூலும் பார்க்கப்படுகின்றது.

> **கிறிஸ்தவ மதம்சார் கல்வியிலும் புலமைபெற்றவராகத் திகழ்ந்து பாடசாலை மட்ட ஆசிரியராகச் சிலகாலங்களும் பின் தலைமை ஆசிரியராகச் சில காலங்களும் பணியாற்றிப் பின் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும் பணியாற்றி தனது ஆய்வுக் களத்தை வளர்த்துக் கொண்டார். குறிப்பாகப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலங்களில் ஆய்வுச்செயற்பாடுகளில் ஈடுபட்டு அதற்கான அடித்தளத்தை இட்டிருப்பதை ஆசிரியர் தனது நூலின் அறிமுகவுரையில் குறிப்பிட்டிருப்பதன் மூலம் அறியமுடிகின்றது**

### Sh நூலாசிரியர் தொடர்பாக

வண. பேராசிரியர் பிலேந்திரன் அவர்களது படைப்பான இந்நூல், பொதுவாக கத்தோலிக்கக் கிறிஸ்தவ சமயத்தை மையப்படுத்தியதாக இருக்கும் அதேவேளை, அது இலங்கை வரலாற்றில் போர்த்துக்கேயரது ஆதிக்கத்தின்கீழ் அறிமுகமாகி பரவலடைந்த தகவல்களை வழங்கும் ஓர் வரலாற்று நூலாகத் திகழ்கின்றது. இந்தவகையில் நூலாசிரியரது பின்புலம் ஆய்வுப் புலமை தொடர்பில் நோக்கும்போது. பேராசிரியர் ஆரம்பம் முதலே கத்தோலிக்கக் கிறிஸ்தவப் பாரம்பரியத்தினூடாக வளர்த்தெடுக்கப்பட்டிருப்பதைக் காணமுடிவதுடன் அப்பின்னணியிலே மதகுருவாகத் தன்னை அர்ப்பணித்து மதம்சார் பணியில் ஈடுபட்டுவந்த அதேவேளை, கிறிஸ்தவ மதம்சார் கல்வியிலும் புலமைபெற்றவராகத் திகழ்ந்து பாடசாலை மட்ட ஆசிரியராகச் சிலகாலங்களும் பின் தலைமை ஆசிரியராகச் சில காலங்களும் பணியாற்றிப் பின் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகவும் பணியாற்றி தனது ஆய்வுக் களத்தை வளர்த்துக் கொண்டார்.

குறிப்பாகப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலங்களில் ஆய்வுச்செயற்பாடுகளில் ஈடுபட்டு அதற்கான அடித்தளத்தை இட்டிருப்பதை ஆசிரியர் தனது நூலின் அறிமுகவுரையில் குறிப்பிட்டிருப்பதன் மூலம் அறியமுடிகின்றது. அவர் குறிப்பிட்டதன்படி இந்நூலின் ஆக்கம் 2004ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை ஏறத்தாளப் பதினைந்து ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் தொகுப்பாக இவற்றைக் குறிப்பிட்டிருப்பதன் மூலம் அறியமுடிகின்றது. இது இவ்வாய்விற்கான பலம் என்றே கூறலாம். அடுத்து ஆசிரியர் கத்தோலிக்கப் பாரம்பரியத்தைப் பின்புலமாகக் கொண்டவர் என்றவகையில் அவர் தனது மதம் சார்பணியின் ஓர்

> **வரலாற்று ஆய்வில் ஈடுபடும்போது, ஆய்வுப் பிரச்சினையை அடையாளப்படுத்தல், வரலாற்று நூல்களுக்குச் சான்றாதாரங்கள் முக்கியமானவை என்றவகையில் அவற்றை சேகரித்தல், அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் கால ஒழுங்கில் அவற்றை ஒழுங்கமைத்தல் என்பவற்றுடன் புறவயத்தன்மை அதாவது ஆய்வாளன் பக்கச்சார்பின்றி உள்ளதை உள்ளவாறு வெளிப்படுத்தவேண்டும் எனக் கூறியிருக்கிறார். இது இந்நூலின் நம்பகத்தன்மைக்குச் சான்றாகும். இதனை இவர் தனது நூலில் உள்ளடங்கியிருக்கும் இயல்களில் தகவல்களை வெளிப்படுத்தும்போது, அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்குப் பின்பற்றியிருக்கும் அடிக்குறிப்புக்கள் மூலம் ஆசிரியர் நிரூபித்திருக்கின்றார்**

> **இரண்டாம் நிலை ஆதாரங்களாகப் பயன்படுத்தியிருக்கும் ஆங்கில மற்றும் தமிழ் நூல்கள் அண்மைக்கால வெளியீடுகளாக இருப்பது புதிய ஆய்வு முடிவுகள் மற்றும் புதிய கருத்துக்களை உள்ளடக்கியவகையில் இந்நூல் உருவாக வழியமைத்திருக்கின்றது. மேலும், இவ்வாதாரங்கள் பகுப்பாய்வு மற்றும் ஒப்பியல் ஆய்வுகளுக்கு உட்படுத்தி தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றை ஆசிரியர் தனது இயல்களில் உள்ளடக்கியபோது அவற்றை அடிக்குறிப்புக்கள் மூலம் உறுதிப்படுத்தியிருக்கின்றார். மேலும், நூலின் ஆசிரியர் தனது நூல் உருவாக்கத்திற்கு முன்னோடியாக சில அறிஞர்களது பங்களிப்பு மற்றும் படைப்புக்கள் தொடர்பில் குறிப்பிட்டிருப்பது முக்கிய விடயமாகும்**

அங்கமாக இதனை முன்னெடுத்திருந்திருக்கின்றார் எனலாம். இதற்கு இந்நூல் கொண்ட கருவான கத்தோலிக்க சமயம் சான்றாக அமைகின்றது. மேலும் இந்நூலின் ஆசிரியர் கத்தோலிக்க சமயம் இலங்கையில் ஊடுருவிக் குறிப்பாகச் சுதேசிகள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற தகவல்களை நற்செய்தி அறிவிப்பு என்ற வகையில் குறிப்பிட்டிருப்பது ஓர் மதம்சார் நிலையின் தாக்கத்தை வெளிப்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக இன்று மதங்கள் ஒவ்வொன்றும் தமது மதம்சார் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பும்போது அவற்றை தமது மதம்சார் மொழிப்பிரயோகத்தின் ஊடக பரப்பிவருவது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக இந்துமதம் சார் கருத்துக்கள் தர்மக் கருத்துக்கள் அல்லது அறக்கருத்துக்கள் என்றவகையிலும் பௌத்தமதக் கருத்துக்கள் தர்ம போதனைகள் என்றவகையிலும் இஸ்லாமியமதக் கருத்துக்கள் இஸ்லாமிய நற்சிந்தனை அல்லது வழிகாட்டல்கள் என்றவகையிலும் பயன்படுத்தப்படுவதுபோல் நூலின் ஆசிரியர் கிறிஸ்தவமதக் கருத்துக்கள் தாங்கிய பைபிள் குறிப்பிடும் நற்செய்திகள் என்ற வாசகத்தைப் பயன்படுத்தியிருப்பது அவரது மதச்சார்பை வெளிப்படுத்தியிருக்கின்றது. இந்தவகையில் நூலின் ஆசிரியர் ஓர் ஆய்வுநூலுக்கான தளத்திலிருந்து பணியாற்றியிருந்தாலும் தனது நிலையிலிருந்து தன்சார் சமயம் சமூகம் சார்பாக இந்நூலைப் படைத்து அதன் சிறப்பை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

### Sh ஆய்வு முறையியல்

இந்நூலின் ஆசிரியர் ஓர் ஆய்வு நூலைப் படைக்கும்போது, பின்பற்றிய ஆய்வு முறையியல் தொடர்பில் நோக்கவேண்டியது அவசியமாகும். இந்நூல் வரலாற்று நூலாகக் காணப்படுவதால் ஆசிரியர் வரலாற்று முறையியல் மற்றும் அணுகுமுறைகளைப் பின்பற்றியிருக்க வேண்டும். அதன்படி ஆசிரியர் தனது அறிமுகவுரையில் தனது ஆய்வின் முறையியல் தொடர்பில் தெளிவுபடுத்தியிருக்கின்றார். குறிப்பாக வரலாற்று ஆய்வில் ஈடுபடும்போது, ஆய்வுப் பிரச்சினையை அடையாளப்படுத்தல், வரலாற்று நூல்களுக்குச் சான்றாதாரங்கள் முக்கியமானவை என்றவகையில் அவற்றை சேகரித்தல், அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் கால ஒழுங்கில் அவற்றை ஒழுங்கமைத்தல் என்பவற்றுடன் புறவயத்தன்மை அதாவது ஆய்வாளன் பக்கச்சார்பின்றி உள்ளதை உள்ளவாறு வெளிப்படுத்தவேண்டும் எனக் கூறியிருக்கிறார். இது இந்நூலின் நம்பகத்தன்மைக்குச் சான்றாகும். இதனை இவர் தனது நூலில் உள்ளடங்கியிருக்கும் இயல்களில் தகவல்களை வெளிப்படுத்தும்போது, அவற்றின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்குப் பின்பற்றியிருக்கும் அடிக்குறிப்புக்கள் மூலம் நிரூபித்திருக்கின்றார். மேலும் இவ்வாசிரியர் இதற்கான சான்றுகளை வரலாற்று முறையியல் அடிப்படையில் முதல்நிலை ஆதாரங்கள் இரண்டாம்நிலை ஆதாரங்கள் என்றவகையில் வகைப்படுத்தி வெளிப்படுத்தியிருக்கின்றார். குறிப்பாக ஆசிரியர் போர்த்துக்கேய மொழியில் காணப்பட்ட மூலங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புக்களை தனது ஆய்வின் முதல்நிலை ஆதாரங்களாகப் பயன்படுத்தியிருப்பது இவ்வாய்வின் உறுதித்தன்மைக்குச் சான்றாக அமைகின்றது.

மேலும் இரண்டாம் நிலை ஆதாரங்களாகப் பயன்படுத்தியிருக்கும் ஆங்கில மற்றும் தமிழ் நூல்கள் அண்மைக்கால வெளியீடுகளாக இருப்பது புதிய ஆய்வு முடிவுகள் மற்றும் புதிய கருத்துக்களை உள்ளடக்கியவகையில் இந்நூல் உருவாக வழியமைத்திருக்கின்றது. மேலும், இவ்வாதாரங்கள் பகுப்பாய்வு மற்றும் ஒப்பியல் ஆய்வுகளுக்கு உட்படுத்தி தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றை ஆசிரியர் தனது இயல்களில் உள்ளடக்கியபோது அவற்றை அடிக்குறிப்புக்கள் மூலம் உறுதிப்படுத்தியிருக்கின்றார். மேலும், நூலின் ஆசிரியர் தனது நூல் உருவாக்கத்திற்கு முன்னோடியாக சில அறிஞர்களது பங்களிப்பு மற்றும் படைப்புக்கள் தொடர்பில் குறிப்பிட்டிருப்பது முக்கிய விடயமாகும். இந்தவகையில் ஆசிரியர் வாரலற்று நூலைப் படைப்பதற்கான முறையியலைச் சரியான வகையில் கையாண்டிருக்கின்றார் எனலாம்.

### Sh நூல் அமைப்பும் உள்ளடக்க விடையத்தை வெளிப்படுத்தியவிதமும்

வண. பேராசிரியர். பிலேந்திரன் அவர்களது வரலாற்றுத் தகவல்களை உள்ளடக்கிய இப் படைப்பு தொடர்பில் நோக்கும்போது, இது ஏறத்தாள 418 பக்கங்களை உள்ளடக்கியவகையில் வெளிவந்திருக்கின்றது. இதன் அட்டைப்படம் யாழ்ப்பாணத்திலுள்ள காலனித்துவ காலப் பண்பாட்டு எச்சமான கோட்டையையும் அதில் அமைக்கப்பட்டிருந்த தேவாலய அடித்தளத்தை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. பொதுவாக இப்பண்பாட்டு எச்சம் அனைவராலும் இலகுவில் அடையாளங்கானக் கூடியதாக இருக்கும் என்ற நோக்கில் ஆசிரியர் இதனைப் பயன்படுத்தியிருக்கின்றார் எனலாம். அதேவேளை, இதன் மூலமாக வரலாற்று நூல் என்ற அடையாளப்படுத்தலை மேற்கொள்வதற்கு ஆசிரியர் முயன்றிருக்கின்றார். இதற்குக் காரணம் நூலின் ஆசிரியர் கத்தோலிக்க மதம்சார் வரலாற்றை வெளிப்படுத்த இந்நூல் மூலம் முயற்சிக்கும்போது அதற்குக் கத்தோலிக்க மதம்சார் பண்பாட்டுச் சின்னங்களை அதிகம் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், ஆசிரியர் அதைவிட வரலாற்றிற்கு முக்கியத்துவம் வழங்கியிருக்கின்றார் எனலாம். இதேவேளை, பொதுவாக நம்மில் பலருக்கு யாழ்ப்பாணக்கோட்டை என்பது ஒல்லாந்தரது கோட்டை என்ற தோற்றப்பாடே முதலில் நினைவிற்கு வரும். ஆனால், அண்மைக்கால ஆய்வுகள் மூலம் அது புராதன காலம் முதல் ஓர் மத்திய நிலையமாக விளங்கிய பகுதியென்றும் அது காலனித்துவவாதிகள் வரிசையில் ஆரம்பத்தில் வருகைதந்த போர்த்துக்கேயரால் இராணுவத்தளமாகப் பயன்படுத்தப்பட அவர்களின் பின் வந்த ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இன்றுள்ளதைப்போல் அமைக்கப்பட்டு அவர்களின் பின்வந்த ஆங்கிலேயர்களாலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்வாறான வரலாற்றுச் சிறப்பைக் கொண்ட ஒன்றாகவே யாழ்ப்பாணக் கோட்டை விளங்குகின்றது. அடுத்து ஆசிரியர் இந்நூலுக்கு போர்த்துக்கேயரின் ஆட்சியில் இலங்கையில் கத்தோலிக்கம் என்று தலைப்பிட்டிருப்பது முக்கியமான விடையமாகும். பொதுவாக இலங்கை வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்தியதாக காலனித்துவவாதிகளது காலப்பகுதி பார்க்கப்படுகின்றது. இதனை இலங்கையில் ஆரம்பித்துவைத்தவர்களாகப் போர்த்துக்கேயர் பார்க்கப்படுகின்றனர். இவர்களை மையப்படுத்தியதாகவும் அவர்களது கலாசார அம்சமான கத்தோலிக்கக் கிறிஸ்தவ சமயத்தை அடிப்படையாகவைத்து இந்நூலைப் படைத்திருப்பது சிறப்பம்சமாகும். ஏனெனில் இலங்கை வரலாற்றில் போர்த்துக்கேயர் காலப்பகுதி தொடர்பில் தமிழ் நூல்கள் அரிதாக இருக்கும் இக்காலப்பகுதியில் இப்படைப்பானது போர்த்துக்கேயர் தொடர்பில் அறிவதற்குப் பெரிதும் உதவியாக இருக்கின்றது. அடுத்து நூலாசிரியர் இந்நூலைத் தனது ஆசிரியர்களுக்குச் சமர்ப்பணம் செய்திருப்பது தன்சார் சமூகக் கடமையைச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கின்றார் எனலாம். அடுத்து இந்நூல் வரலாற்று நூல் என்ற அடையாளத்தைப் பெறுவதற்கு இந்நூலுக்குச் சிரேஷ்ட பேராசிரியர். ப.புஷ்பரட்னம் வழங்கியிருக்கும் அணிந்துரை சிறந்த பலம்

> **யாழ்ப்பாணக்கோட்டை என்பது ஒல்லாந்தரது கோட்டை என்ற தோற்றப்பாடே முதலில் நினைவிற்கு வரும். ஆனால், அண்மைக்கால ஆய்வுகள் மூலம் அது புராதன காலம் முதல் ஓர் மத்திய நிலையமாக விளங்கிய பகுதியென்றும் அது காலனித்துவவாதிகள் வரிசையில் ஆரம்பத்தில் வருகைதந்த போர்த்துக்கேயரால் இராணுவத்தளமாகப் பயன்படுத்தப்பட அவர்களின் பின் வந்த ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இன்றுள்ளதைப்போல் அமைக்கப்பட்டு அவர்களின் பின்வந்த ஆங்கிலேயர்களாலும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறான வரலாற்றுச் சிறப்பைக் கொண்ட ஒன்றாகவே யாழ்ப்பாணக் கோட்டை விளங்குகின்றது. அடுத்து ஆசிரியர் இந்நூலுக்கு போர்த்துக்கேயரின் ஆட்சியில் இலங்கையில் கத்தோலிக்கம் என்று தலைப்பிட்டிருப்பது முக்கியமான விடையமாகும்**

எனலாம்.

வண.பேராசிரியர். பிலேந்திரன் அவர்களது நூல் போர்த்துக்கேயர்காலக் கத்தோலிக்க சமயத்தை 21 இயல்களை உள்ளடக்கமாகக்கொண்டு வெளிப்படுத்தியிருக்கின்றது. இவ்வியல்களை ஐந்து முக்கிய பகுதிகளாகப் பிரித்துப்பார்க்கலாம். அதில் முதலாம் இயல் இலங்கையில் போர்த்துக்கேயரது ஆதிக்கத்திற்கு முன்னரே கிறிஸ்தவம்சார் பண்பாடு நிலவியிருந்தது தொடர்பான தகவல்களை இலக்கிய மற்றும் தொல்லியல் ஆதாரங்களை அடிப்படையாகக்கொண்டு நிறுவியிருப்பதைக் காணமுடிகின்றது. இம்முயற்சி மிக முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது. இரண்டாம் இயல் போர்த்துக்கேயரது கடல்சார் எழுச்சி மற்றும் மதப்பரப்பு நடவடிக்கைக்கான அமைப்புமுறை அவ்வொழுங்கமைப்பினூடாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை வெளிப்படுத்தியிருப்பதைப் பார்க்கமுடிகின்றது.

மூன்றாவது மற்றும் நான்காவது இயல்கள் போர்த்துக்கேயரது வருகையின்போது, இலங்கையின் கடல்சார் இராச்சியங்களாக இருந்த கோட்டை மற்றும் யாழ்ப்பாண அரசுகளுடனான அவர்களது தொடர்புகள் மற்றும் மேலாதிக்கத்தை ஏற்படுத்துதல் போன்றவற்றை வெளிப்படுத்தியிருக்கின்றது. ஐந்தாவது முதல் பதினைந்தாவது வரையான அத்தியாயங்கள் கத்தோலிக்க சமயம் பரவலடைந்த முறையை நற்செய்தி அறிவிப்பு என்ற கருப்பொருளூடாக முன்னெடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கமுடிகின்றது. இத்தகவல்கள் இந்நூலின் மையக்கரு எனக் கூறலாம். ஏனெனில், போர்த்துக்கேயர் வருகைதந்ததன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகச் சமயம் முக்கியம் பெறுகின்றது. குறிப்பாக அவர்கள் வருகைதந்ததன் நோக்கம் வர்த்தகம் மற்றும் மதம் பரப்பல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பதாகும்.

> **கத்தோலிக்கக் கிறிஸ்தவ சமயத்தை அடிப்படையாகவைத்து இந்நூலைப் படைத்திருப்பது சிறப்பம்சமாகும். ஏனெனில் இலங்கை வரலாற்றில் போர்த்துக்கேயர் காலப்பகுதி தொடர்பில் தமிழ் நூல்கள் அரிதாக இருக்கும் இக்காலப்பகுதியில் இப்படைப்பானது போர்த்துக்கேயர் தொடர்பில் அறிவதற்குப் பெரிதும் உதவியாக இருக்கின்றது. அடுத்து நூலாசிரியர் இந்நூலைத் தனது ஆசிரியர்களுக்குச் சமர்ப்பணம் செய்திருப்பது தன்சார் சமூகக் கடமையைச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கின்றார் எனலாம். அடுத்து இந்நூல் வரலாற்று நூல் என்ற அடையாளத்தைப் பெறுவதற்கு இந்நூலுக்குச் சிரேஷ்ட பேராசிரியர். ப.புஷ்பரட்னம் வழங்கியிருக்கும் அணிந்துரை சிறந்த பலம் எனலாம்**

இந்தவகையிலே போர்த்துக்கேயர் இலங்கையில் மேற்கொண்ட சமய நடவடிக்கைகளை ஆசிரியர் பத்து இயல்களில் சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கின்றார். இதனை இன்னொருவகையில் கூறுவதாயின் காலனித்துவம் என்பதன் பொருள் மேலைத்தேயக் கலைகலாசார அம்சங்களைக் கீழைத்தேசங்களில் பரப்புதல் என்பதாகும். அதனைப் போர்த்துக்கேயர் எவ்வாறு இலங்கையில் பரப்பினர் என்பதை இதனூடாகப் பார்க்க முடிகின்றது. இறுதியான பதினாறு தொடக்கம் இருபத்தொன்றுவரையான இயல்கள் கத்தோலிக்க சமயம் பரவலின் விவுகள் தாக்கங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக நூலாசிரியர் போர்த்துக்கேயர் கத்தோலிக்க சமயத்தைச் சுதேசிகள்மீது பரப்பும்போது கையாண்ட வழிமுறைகளைப் பக்கச்சார்பின்றி தனது நூலில் எடுத்துக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்க விடையமாகும். பொதுவாக நூலின் ஆசிரியர் தான் வெளிப்படுத்தவந்த விடையத்தை இருபத்தொரு இயல்களில் சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார் எனலாம்.

### Sh முடிவுரை

பொதுவாக ஒரு வரலாற்றுத் தகவல்கள் தாங்கிய நூலை எழுதுவதென்பது மிகக் கடினமான பணியாகும். அப்பணியை வண. பேராசிரியர். ஞானமுத்து பிலேந்திரன் முன்னெடுத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். நூலாசிரியர் கிறிஸ்தவ நாகரிகத்துறையைச் சேர்ந்தவராக இருக்கும் அதேவேளை, வரலாற்றுத் துறைசார் பணியை முன்னெடுத்திருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும். குறிப்பாக ஒரு வரலாற்று நூலை எழுதுவதாயின் அதற்கான பயிற்சி மற்றும் முறையியலை அறிந்திருக்கவேண்டும் குறிப்பாக ஆதாரங்களின்றி ஓர் வரலாற்று நூலை எழுதமுடியாது என்பது விதி. இவ்விதிகளைக் கடைப்பிடித்து வரலாற்று முறையியல்களை பின்பற்றி இந்நூலைப் படைத்திருக்கின்றார்.

குறிப்பாக நூலாசிரியர் தன்சார் சமூகத்தின் சமயம் பண்பாடு ஆகியவற்றை தனக்குரிய கடமையாகக்கொண்டு இந்நூலின் மூலம் ஆவணப்படுத்தியிருக்கின்றார். இதன்மூலம் எதிர்கால சந்ததி பயனடையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

காயத்திரி விக்கிரமசிங்க



### அன்னை முத்துமாரி அருள்பாலிக்கும்

# புண்ணிய பூமி மாத்தளை

"உலகத்து நாயகியே எங்கள் முத்துமாரியம்மா உன்பாதம். சரண்புகுந்தேன் – எங்கள் முத்துமாரி" என்று முத்துமாரியம்மையின் பெருமையைப் பாட்டில் இசைக்கின்றார் மகாகவி பாரதியார்.

காசி என்றதும் விசாலாட்சியும், காஞ்சி என்றதும் காமாட்சியும், மதுரை என்றதும் மீனாட்சியும் நினைவில் எழுவது போல் மாத்தளை என்றதும் முத்துமாரியம்மைதான் நினைவில் வருகிறார்.

அருளாட்சி நடத்தும் அன்னையாக, நர்த்தன சுந்தரியாக, சிறுமை கண்டு பொங்கும் தேவியாக, மகிஷாசுர மர்த்தினியாக, கொடுமையைக் கருவறுக்கும் காளியாக, பசிப்பிணி போக்கும் அன்னபூரணியாக, அரனுடன் கலந்த அர்த்தநாரியாகத் திருக்கோலம் காட்டும், அன்னை முத்துமாரி மாத்தளையில் குடிகொண்டு அருள்பாலிக்கின்றாள்.

மாத்தளை, மலையகத்தின் தலைவாயில். இராமேஸ்வரம் கரையிலிருந்து படகுகள் மூலமும் பாய்மரக் கப்பல் மூலமும் கடலைக் கடந்து, கொடிய காடுகளுக்கிடையே கால்நடையாக உயிர்தப்பி வந்ததற்காக நன்றி கூறும் முதல் தெய்வம், எங்கள் மாத்தளை முத்துமாரி. எங்களது வரலாறு மாத்தளை முத்துமாரியம்மன் வரலாற்றுடன் இணைந்துள்ளது. வரலாற்றுச் சிறப்பும் புராதன தொன்மையும் கொண்ட ஆலயத்தின் மாசி மகோற்சவம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தினமும் காலை, மாலை திருவிழாக்கள் நடைபெற்று, சுவாமி உள்வீதி, வெளிவீதி வந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மங்களேஸ்வரர் குருக்களின் பேரனும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் பிரதான குருக்களான சுப்பிரமணிய குருக்களின் மருமகனும், சிவஸ்ரீ மணி சரவணபவாநந்த குருக்கள் மற்றும் சாமி விஸ்வநாத குருக்களிடம் வேதங்களை கற்றவருமான சிவஸ்ரீ கிரியா பானு சு.கிருஸ்ணகுமார் அவர்களின் திருக்கரங்களினால் கிரியைகள் நடக்கத் திருவருள் பாலித்துள்ளது.



**சிவஸ்ரீ கிரியா பானு சு.கிருஸ்ணகுமார் குருக்கள்**

தமிழ் மக்கள் எங்கெல்லாம் புலம் பெயர்ந்து சென்றார்களோ, அங்கெல்லாம் மாரியம்மனையும் உடன் கூட்டிக் கொண்டே சென்றிருக்கின்றார்கள். பிரித்தானியப் பேரரசின் போது உலகத்தின் பல நாடுகளுக்கும் குடிபெயர்ந்த தமிழக மக்கள் அங்கெல்லாம் மாரியம்மனைக் கொண்டு சென்று வழிபட்டு வருகின்றார்கள். தென்னாபிரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, மொரிசியஸ், தாய்லாந்து மற்றும் பிஜி, மாட்டினிக், குவாதலோப் சென் வின்ஸ்டன், சுரிநாம், பிரெஞ் கயானா உட்பட பிரெஞ்சு மொழி பேசுகின்ற தீவுகளில் கூட மாரியம்மனைப் போற்றி கரகம் பாலித்து வழிபடும் பாங்கினை இன்று காண்கின்றோம்.

பிணிகளுக்கு மாற்றுண்டு எங்கள் முத்துமாரி பேதைமைக்கு மாற்றமில்லை. எங்கள் முத்துமாரி - அடைக்கலமே புகுந்துவிட்டோம் எங்கள் முத்துமாரி என்று பாரதி பாடியதற்கொப்ப மாத்தளை மாரியம்மனிடம் அடைக்கலம் புகுந்து மலைநாட்டில் அடியெடுத்து வைத்தவர்கள்தான் எங்கள் மூதாதையர்கள்.



**ஆலயபரிபாலன சபை உறுப்பினர்கள்**

மாத்தளை முத்துமரியம்மையின் தெய்வீக கோலத்தில் சிந்தை இழந்து போனவர்கள் பலர். சைவபெரியார் உயர்திரு முருகேசுப் பிள்ளை, கவிஞர் நவாலியூர் சு. சொக்கநாதன், கவிஞர் ஈழவாணன், கவிஞர் வி. கந்தவனம் என அம்பிகையைப் பாடி பரவியவர் பலர்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதக் கலவரத்தில் அசுரர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட பஞ்சரதங்களையும் மீள நிர்மாணித்து மாத்தளை நகர வீதிகளில் 10 ஆண்டுகளுக்குப் பின்னர் 1993 அம்பாள் பவனி வரப் பணி செய்த ஸ்ரீமான் மாரிமுத்துச் செட்டியார் மற்றும் பூரண ஒத்துழைப்பு வழங்கிய பரிபாலன சபை உறுப்பினர்கள் என்றும் நினைவு கூரத்தக்கவர்கள்.

மாத்தளை முத்துமாரியம்மன் தெய்வீகக் கோலத்தில் சிந்தை இழந்துபோன கவிஞர் நாவலியூர் சொக்கநாதன், 1964ஆம் ஆண்டு எழுதிய 'மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி' என்ற நூலைப் பலரும் மறந்து போயிருந்த நிலையில், பெரும் பொக்கிஷம் பேணப்படுவதுடன் இளைய தலைமுறையினர் கற்றறிந்து பயன்பெறும் வகையில் மாத்தளை எச்.எச.விக்ரமசிங்க மறுபதிப்பு செய்து 1993ஆம் ஆண்டு தலைவராக இருந்த ஸ்ரீமான் மாரிமுத்துச் செட்டியாரிடம் சமர்ப்பித்தது குறிப்பிடத்தக்கது.

உயர்திரு முருகேசுபிள்ளை அன்னை, முத்துமாரியைப் பற்றிப் பகிரும் அந்தாதி ஊரில் பாடி பரவியமை குறிப்பிடத்தக்கது. மலரன்பனின் 'மூங்கிலின் நாதம், தென்றலின் கீதமும்' சிலை வடித்து உயிர் கொடுத்த சிற்பி வாழனும் மலையகம் மாத்தளையில் தேரும் ஓடனும் (சீர்காழி சிவ சிதம்பரம்) 'பன்னாகமம் என்னும் பொன்னகர் மாத்தளையில்' ஆவணி சதுர்த்தியில் அருளும் சக்தி என மாத்தளை வடிவேலனின் வரிகளில் சங்கீத ரத்னம், என்.ரகுநாதன் அவர்களது குரலின் பாடல் ஒலிக்க, ஈழத்து ரத்தினத்தின் வரிகளில், மாத்தளையில் மாசிமாதம் திருவிழா' முதலான பாடல் காதுக்கினிய கீதமாகக் காற்றில் மிதந்து பக்திப் பரவசத்தை இன்றும் ஊட்டுவனவாகும்.

மாத்தளையில் மாசிமக திருவிழா என்ற பாடல் வரிகளோடு 'அவள் ஒரு ஜீவநதி' என்ற திரைப்படத்தின் ஊடாக மாத்தளை தேர்த்திருவிழா காட்சிகளைப் பூஜை வழிபாடுகளை மாத்தளை காத்திகேசு பதிவுசெய்திருக்கிறார்.

மாத்தளை பெ.வடிவேலன் மலையகத்தில் 'மாரியம்மன் வழிபாடும் வரலாறும்' உட்பட பல நூல்களை எழுதி வெளியிட்டமை சிறப்பு நிகழ்வாகும்.

மாசிமகமும் பஞ்ச இரத பவனியும் சிறப்பாக நடைபெற அயராது உழைக்கும் ஆலய பரிபாலன சபை தலைவர் விக்கினேஸ்வரர் சர்வானந்தா, செயலாளர் செல்லையா ஜெயராஜ், பொருளாளர் பெரியசாமி மனோகரன் மற்றும் வேலாயுதம் சுதர்ஷன், அங்கமுத்து யோகராஜா செட்டியார், கந்தையா கனகரட்ணம், வேலு அழகேஸ்வரன், அங்கமுத்து திருச்செல்வம் ஆசாரியார், வீரையா முத்துசாமி, இராமசாமி கிருஷ்ணகுமார், சுப்பையா பிரதீபன், மாரிமுத்து நாகேந்திரன், செல்லையா விஸ்வநாதன், தியாகராஜா கிஷோகுமார் ஆகியோர் ஆலயத்தைச் சிறந்த முறையில் பரிபாலித்து வருகின்றனர்.


மாத்தளை முத்துமாரியம்மன் அருளின் அன்பின் இரக்கத்தின் கருணையின் ஒரு குறியீடு. வன்முறையும் கோரமும் தலைவிரித்தாடும் இன்றைய சூழலில் பொறாமையும் எரிச்சலும் பிறர் வாழப்பொறுக்காத தன்மையும், சமூக வாழ்வில் நன்கு வேரூன்றி விட்ட காலகட்டத்தில் மாத்தளை முத்துமாரி அம்பிகையைத் தரிசித்து தேர்த்திருவிழாவில் கலந்து அன்பையும் இரக்கத்தையும் யாசிப்பது தார்மீகக் கடமையாகும்.

> **மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் 02.02.2024 காலை 11 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும். 23.02.2024 வெள்ளிக்கிழமை பகல் 1 மணிக்கு மகேஸ்வர பூஜை இடம்பெறும். 24.02.2024 சனிக்கிழமை காலை 8 மணிக்கு பஞ்சரத பவனி நடைபெறும்.**

> **23.02.2024 வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு சுடுகங்கை ஸ்ரீ ஏழுமுகக் காளியம்மன் கோவிலில் இருந்து காவடி ஊர்வலம் புறப்படும், காலை 10 மணிக்கு தீ மிதிப்பும், பகல் 11 மணிக்கு ஸ்ரீ சிவனடியார் திருவிழாவும், வசந்த மண்டப பூஜையும், பிற்பகல் 1 மணிக்கு மகேஸ்வர பூஜையும் (அன்னதானம்) அன்றிரவு திருச்சூரக திருவேட்டை திருவிழாவும் நடைபெறும். 24.02.2024 சனிக்கிழமை காலை 8 மணிக்கு இரதோற்சவ வசந்த மண்டப பூஜை நடைபெறும். 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு கற்பூர திருவிழா நடைபெறும். 26.02.2024 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பாற்குட ஊர்வலமும் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 7 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும்**







புது டெல்லி

# 30 நகரங்களில் யாசகர் அவுட்

யாசகம் பெறுவோர் இல்லாத இந்தியாவை உருவாக்க இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக கலாசாரம், வரலாறு அல்லது சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த 30 நகரங்களை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை தெரிவு செய்துள்ளது.

வடக்கில் அயோத்தி, தெற்கில் திருவனந்தபுரம், கிழக்கில் குவாஹாட்டி, மேற்கில் திரிம்பகேஷ்வர் என நாட்டின் அனைத்து பகுதிகளைச் சேர்ந்த நகரங்களும் இதில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, மதுரை, கோழிக்கோடு,



விஜயவாடா, மைசூரு உள்ளிட்ட நகரங்களும் இடம் பெற்றுள்ளன.

இந்த 30 நகரங்களிலும், 'விளிம்புநிலையில் உள்ள தனிநபர்களின் வாழ்வாதாரத்துக்கு ஆதரவளித்தல்' (ஸ்மைல்) என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக எதிர்வரும் 2026ஆம் ஆண்டுக்குள் யாசகம் பெறுவோர் இல்லாத நிலையை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதற்காக, 30 நகரங்களிலும் சம்பந்தப்பட்ட மாவட்ட மற்றும் நகராட்சி அதிகாரிகள் உதவியுடன் யாசகம் பெறும் முதியவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பற்றிய கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்.

அதன் பிறகு யாசகம் பெறுவோர் மீட்கப்பட்டு, மறுவாழ்வு மையங்களில் சேர்க்கப்படுவார்கள். அங்கு அவர்களுக்கு உணவு, தங்குமிடம் வழங்கப்படுவதுடன் வாழ்வாதாரத்துக்கு தேவையான கல்வி, திறன் மேம்பாட்டு பயிற்சி, வேலைவாய்ப்பு உள்ளிட்ட உதவிகள் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேசம்

# மேக்-அப் மாமியாரால் மருமகள் விவாகரத்து

உத்தரப்பிரதேசத்தின் ஆக்ரா நகரில் மால்புரா பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் பெண் ஒருவர் விவாகரத்து கோரியதற்கான காரணம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அந்த பெண்ணும், அவருடைய சகோதரியும் எட்டு மாதங்களுக்கு முன்பு சகோதரர்கள் இருவரைத் திருமணம் செய்து கொண்டனர். எல்லாம் நன்றாகச் சென்று கொண்டு இருந்த நிலையில், மருமகளின் அனுமதியின்றி அவருடைய மேக்-அப் சாதனங்களை மாமியார் பயன்படுத்தி வந்துள்ளார்.

இதனை அறிந்த அந்த பெண் ஆத்திரமடைந்துள்ளார். ஏதேனும் நிகழ்ச்சி ஒன்றுக்குச் செல்ல வேண்டுமென்றாலும், மருமகளிடம் மேக்-அப் பொருட்கள் இருக்காது. அவருடைய மாமியாரே அவற்றைப் பயன்படுத்தி வந்துள்ளார்.



இதுபற்றி மாமியாரிடம் மருமகள் வாக்குவாதம் செய்துள்ளார். ஆனாலும் இந்த விவகாரம் முடிவுக்கு வரவில்லை. நடந்த விடயங்களை தன்னுடைய மகனிடம் மாமியார் தெரிவித்துள்ளார். இதனை தொடர்ந்து, வீட்டில் இருந்து அந்த பெண்ணும், அவருடைய சகோதரியும் விரட்டி விடப்பட்டுள்ளனர். இதனை தொடர்ந்து, மருமகள் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இந்நிலையில், ஆக்ராவில் உள்ள குடும்ப ஆலோசனை மையத்தில், நடந்த விடயங்களை மருமகள் கூறியுள்ளார். இதன் தொடர்ச்சியாக, கடந்த ஞாயிற்றுக்கிழமை, மருமகள் மற்றும் மாமியார் இருவரையும் அழைத்து ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது

எனினும், இந்த விடயத்தில் விவாகரத்து வேண்டும் என்று மருமகள் பிடிவாதத்துடன் இருக்கிறார். அனுமதியின்றி, மேக்-அப் பொருட்களை மாமியார் பயன்படுத்துகிறார் என்பது மட்டுமல்லாமல், கணவர், குடும்ப வன்முறையில் ஈடுபடுகிறார் என்றும் தாயார் கூறும் விடயங்களில் மட்டுமே அதிக கவனம் செலுத்துகிறார் என்றும் அதனால் தான் விவாகரத்து கோரியதாகவும் மருமகள் தெரிவித்துள்ளார்.

சூடான்

# நிலத் தகராறில் 54 பேர் பலி

வட ஆப்பிரிக்க நாடுகளான சூடான் மற்றும் தெற்கு சூடான் எல்லையில் அமைந்துள்ள எண்ணெய் வளம் கொண்ட அபேயில் ஆதிக்கம் செலுத்த இரு நாடுகளும் விரும்புகின்றன. கடந்த 2011இல் சூடானில் இருந்து தெற்கு சூடான் சுதந்திரம் பெற்ற பின்பும், இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை.

அபேய் உரிமை தொடர்பாக பொது வாக்கெடுப்பை நடத்தவேண்டும் என ஆப்பிரிக்க யூனியன் பரிந்துரைத்தது. ஆனால் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் வாக்களிக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகள்



நிலவி வருகின்றன. அபேய் தற்போது தெற்கு சூடானின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த ஆண்டு மார்ச் மாதம் தெற்கு சூடான் தன் படைகளை அபேய்க்கு அனுப்பியதில் இருந்து இரு நாடுகளின் எல்லை மோதல்கள் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக, இங்கு ஐ.நா. பாதுகாப்புப் படை இயங்கி வருகிறது.

எனினும், இங்கு இனக்கலவரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், ஞாயிற்றுக்கிழமை (28) ஆயுதங்களுடன் நுழைந்த நபர்கள் சிலர் கிராம மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினர்.

இந்த துப்பாக்கிச்சூட்டில் ஐ.நா.வின் பாதுகாப்புப் படை வீரர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்பட 54 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 60க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்திற்கு ஐ.நா.சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மத்திய பிரதேசம்

# 103 வயதில் 3ஆவது திருமணம்

மத்திய பிரதேச மாநிலம், போபாலின் இத்வாரா பகுதியைச் சேர்ந்தவர் ஹபிப் நாசர் 103 வயதான இவர், சுதந்திர போராட்ட வீரர் ஆவார்.

முதல் மனைவி மற்றும் இரண்டாவது மனைவி காலமான நிலையில், தனியாக வசித்து வந்தார். தனக்கு ஆறுதலாக, அன்புடன் கவனிப்பதற்கு யாரும் இல்லாததால் மனவருத்தத்தில்



இருந்த அவர், 49 வயது நிரம்பிய பிரோஸ் ஜகான் என்ற பெண்ணை மூன்றாவது முறையாக திருமணம் செய்துள்ளார்.

இவர்களின் திருமணம் கடந்த ஆண்டு நடைபெற்ற நிலையில், ஓராண்டு கழித்து அவர்களின் வீடியோ வெளியாகியிருக்கிறது. திருமணம் முடிந்து புது மனைவியை ஓட்டோவில் வீட்டிற்கு அழைத்துச் சென்றபோது ஹபிப் நாசருக்கு அங்கிருந்தவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளதுடன் அவரை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

பிரான்ஸ்

# மோனா லிசா ஓவியம் மீது சூப் வீசிய பெண்கள்


16ஆம் நூற்றாண்டில் ஓவியர் லியோனார்டோ டா வின்சியால் வரையப்பட்ட புகழ்பெற்ற மோனா லிசா ஓவியம் பிரான்ஸின் தலைநகர், பாரிசில் உள்ள லூவ்ரே அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உலக புகழ்பெற்ற மோனா லிசா ஓவியத்தின் மீது பெண் போராட்டக்காரர்கள் சூப்பை ஊற்றியுள்ளனர்.

துப்பாக்கி குண்டுகள் துளைக்காத கண்ணாடிக்குப் பின்னால் பத்திரமாக மோனா லிசா ஓவியம் வைக்கப்பட்டு இருப்பதால் இந்த சம்பவத்தால் பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை என அருங்காட்சியகம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக வெளியான வீடியோவில் 'உணவு அக்கறை' என்ற எழுத்துகள் பொறிக்கப்பட்ட ஆடை அணிந்து வந்த இரண்டு பெண்கள் ஓவியத்தின் மீது சூப் ஊற்றியுள்ளனர்.

மேலும், தாக்குதலுக்குப் பிறகு ஓவியத்தின் முன் நின்றுகொண்டு 'ஆரோக்கியமான மற்றும் நிலையான உணவு' உரிமை வேண்டும் என்றும் நமது விவசாய முறை



நோய்வாய்ப்பட்டு விட்டது என்றும் தெரிவித்துள்ளனர். தாக்குதல் நடந்தவுடன் அருங்காட்சியக பொறுப்பாளர்கள் ஓவியத்தை கருப்பு துணி கொண்டு மூடினர்.

ஓவியர் லியோனார்டோ டா வின்சினால் வரையப்பட்ட புகழ்பெற்ற மோனா லிசா ஓவியம் இதற்கு முன்பாக பலமுறை சேதப்படுத்தப்பட்டதும், ஒருமுறை திருடப்பட்டும் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



## தேசங்களுக்கான ஆபிரிக்கக் கிண்ணத் தொடர்:


# நடப்புச் சம்பியன் வெளியேற்றம்

ஐவரி கோஸ்டில் நடைபெற்று வரும் தேசங்களுக்கான ஆபிரிக்கக் கிண்ணத் தொடரிலிருந்து நடப்புச் சம்பியன்களான செனகல் வெளியேற்றப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை நடைபெற்ற ஐவரி கோஸ்டுடனான இறுதி 16 அணிகளுக்கான சுற்றுப் போட்டியில் தோற்றே தொடரிலிருந்து செனகல் வெளியேறியுள்ளது.

போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்த நிலையில், பெனால்டியில் 5-4 என்ற ரீதியில் வென்றே காலிறுதிப் போட்டிக்கு ஐவரி கோஸ்ட் முன்னேறி, செனகலை தொடரிலிருந்து வெளியேற்றியது.

செனகல் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹபிப் டியல்லோவும், ஐவரி கோஸ்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை பிராங்க் கெஸ்ஸியும் பெற்றிருந்தனர்.



# 'ஸ்கெவியைப் பிரதியிடும் அறிக்கைகள் உண்மையற்றவை'

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முகாமையாளரான ஸ்கெவியைப் பிரதியிடும் அறிக்கைகள் முழுமையாக உண்மையற்றவையென இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலின் முகாமையாளர் அர்ட்டா தெரிவித்துள்ளார்.

ஆர்சனலிலிருந்து வெளியேறுவது குறித்து யோசிப்பதாக ஸ்பானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

எதிர்வரும் 2025ஆம் ஆண்டு வரையில் ஆர்சனலுடன் அர்ட்டா ஒப்பந்தத்தைக் கொண்டிருக்கிறார்.



# உலகக் கிண்ணத்தை இலக்கு வைக்கும் சஹர்

தனது தந்தைக்கு மூளைப் பக்கவாதம் ஏற்பட்டமை காரணமாக தென்னாபிரிக்காவுக்கான இந்தியாவின் சுற்றுப்பயணம், ஆப்கானிஸ்தானுக்கெதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளைத் தவறவிட்ட இந்தியாவின் வேகப்பந்துவீச்சாளர் தீபக் சஹர், சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரை இலக்கு வைத்துள்ளார்.

இந்நிலையில் இந்தியக் குழாமில் சஹர் இடம்பெறுவதற்காக ஐ.பி. எல்லை மட்டுமே நம்பியிருக்க வேண்டியுள்ளது. ஏனெனில் உலகக் கிண்ணத்துக்கு முன்பதாக வேறெந்தப் போட்டிகளிலும் இந்தியா பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# ஜடேஜா, ராகுல் இல்லை



இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டிலிருந்து இரவீந்திர ஜடேஜா, லோகேஷ் ராகுல் ஆகியோர் விலகியுள்ளனர். பின்தொடை தசைநார் காயம் காரணமாக ஜடேஜாவும், முன்தொடை நோவு காரணமாக ராகுலும் இப்போட்டியிலிருந்து விலகியுள்ளனர்.

இந்தியக் குழாமில் புதுமுக துடுப்பாட்டவீரர் சஃப்ராஸ் கான், புதுமுக சுழற்பந்துவீச்சாளர் சௌரஃப் குமார் மற்றும் வொஷிங்டன் சுந்தர் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அணியில் ஜடேஜாவை குல்தீப் யாதவ்வும், ராகுலை ரஜாட் பட்டிடாரும் பிரதியிடுவரென எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கைக்கெதிரான டெஸ்ட்

# ஆப்கான் குழாமில் ரஷீட் கான் இல்லை

இலங்கைக்கெதிரான ஒற்றை டெஸ்டுக்கான ஆப்கானிஸ்தான் குழாமில் ரஷீட் கான் பெயரிடப்படவில்லை. முதுகுப் பகுதி சத்திர சிகிச்சையிலிருந்து குணமடைந்து வருவதன் காரணமாகவே ரஷீட் கான் தேர்வு செய்யப்படவில்லை.

குழாம்: இப்ராஹிம் ஸட்ரான், அப்துல் மலிக், நூர் அலி ஸட்ரான், ரஹ்மட் ஷா (உப அணித்தலைவர்), ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி (அணித்தலைவர்), பஹிர் ஷா, நசீர் ஜமால், இக்ரம் அலிகில் (விக்கெட் காப்பாளர்), மொஹமட் இஷாக், குவைஸ் அஹ்மட், ஸியா-உர்-ரஹ்மான், ஸஹிர் கான், யமின் அஹ்மட்ஸாய், நிஜாட் மசூட், மொஹமட் சலீம், நவீன் ஸட்ரான்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 31 ஜனவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.